# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,255 — 1922 ம் ௵ வைகாசிமீ 5 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1892 ம் ஆண்டின் சிறு நகர சுகாதாரக் கட்டளைச்சட்டத்தின் 9E ம் பிரிவின் இரண்டாம் உபபிரமாணத்தை அனுசரித்து அதன் கீழ் மாத்தறை டிஸ்திறிக்கில் டெவந்துறை என்னும் நகரைக்குறித்துத் தென் மாகாணம் மாத்தறை டிஸ்திறிக்கு சுகசங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு கீழே காணப்படும் உப பிரமாணங்களை உச்சிதந்தங்கிய தேசாதிபதியவர்களால் சட்டபரிபாலன சபையாரது புத்திமதியுடன் அங்கீகரிக்கப்பட்டதென பலரும் அறியும்படியாக இத்தால் பிரசுரிக்கப்படுகிறது.

தேசாதிபதியின் கட்டளைப்படி,

கொலோனியல் சக்கிறுத்தார் கந்தோர்,
கொழும்பு, 1922 ம் ௵ பைங்குனிமீ 25 ந் வ.

இறேம் தொம்ஸன்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

அத்தியாயம் 1. பிரிவு 9E (2) (*a*).—கூட்டங்களின் கவனிக்கப்படவேண்டிய நேரமும் இடமும் ஒழுங்குகளும்.

1. யாதாமொரு கருமம்பார்க்க வேண்டியிருக்கும் பொழுதெல்லாம் சங்கத்தாரின் சாதாரணமான கூட்டங்கள் கூட்டப்படவேண்டியது.

2. சங்கத்தின் கூட்டங்களுக்குச்சேர்ந்த சகல முகாந்தரங்களுக்கும் அங்கத்தவர்களின் மூப்பும் முதன்மையும் பின்வரும் வகையாகும்:—

(*a*) உத்தியோக நிமித்தமாக அக்கிராசனராயிருப்பவர்;
(*b*) தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள் தத்தம்பெயர் "கெசற்" பத்திரிகையில் பிரசித்தப்படப்பட்ட ஒழுங்கின்படி.

3. அக்கிராசனர் ஒழுங்கைக் சாத்து ஒழுங்கு முறையிலே நிகழும் தர்க்கத்திற்குரிய கேள்விகளுக்கு தீர்ப்புச் செய்வார்.

4. யாதாமொரு சாதாரணமான அல்லது விசேஷ கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட மணி நேரத்தின்பின் கூட்டம் கூடவேண்டிய நிருவாகத்தொகையான அங்கத்தவர் கூடவே சங்கத்தலைவராயிருக்கத் தத்துவமுள்ளவர் உடனே தன்னுடைய ஆசனத்தில் உட்கார, சங்கக்கருமம் நடைபெறத் தொடங்கவேண்டியது. கூட்டத்திற்காக நியமிக்கப்பட்ட நேரத்திலிருந்து அரைமணித்தியாலஞ்சென்று பின்னும் நிருவாக தொகை சமுகமாயில்லாதிருந்தால் கூட்டத்தை தினம் குறியாமலோ அல்லது தினங் குறித்தோ தவணை போடப்படும்.

5. கூட்டம் நடக்கும்பொழுது தர்க்கத்திலே அல்லது சங்கத்தலைவரின் விசேஷ அனுமதி ஆவசீக நியாயம்பற்றிப் பெற்றுக்கொண்டு கேட்டால் அல்லது பிரேரித்தா லல்லாதபடி மற்றும் நேரத்திலே ஒரு கேள்வியைக் கேட்க அல்லது காரியத்தைப்பற்றிப் பிரேரிக்க எண்ணியிருக்கும் நாளுக்கு குறைந்த கணக்கு நாலு நாட்களுக்கு முந்தி எழுத்திலே அறிவித்தல் கொடுக்கவேண்டும் அல்லது முந்தின கூட்டத்தில் அறிவித்தல் கொடுக்கவேண்டும்.

6. அப்படி அறிவித்தல் கொடுக்கும் ஒவ்வொரு அங்கத்தவரும் சங்கத்தலைவருக்கு அக்கேள்வி அல்லது பிரேரணை மெழுதிய பிரதியொன்றைக் கொடுக்கவேண்டும்.

7. சங்கம் சர்வசம்மதமாய் வேறு மாதிரித் தீர்மானியாதிருந்தால், கூட்டத்திலே கேட்கப்படும் கேள்விகளும் பிரேரணைகளும் அறிவித்தல் கொடுத்த ஒழுங்கின்படியே நடையாகவேண்டும்.

8. ஒரு கூட்டத்திலே தள்ளிவிடப்பட்ட ஒரு பிரேரணை குறைந்த கணக்கு மூன்று மாதங் கழிந்தாலே யல்லாமல் மறுபடி கொண்டுவரப்படாது, சங்கத்தால் அங்கீகாரமான பிரேரணையொன்றுக்கு ஏதுமாதிரி விரோதமாயிருக்கும் யாதொன்றும் மேற்குறித்த காலம் போகுமுன் கவனிக்கப்படமாட்டா.

9. ஒரு மன்றாட்டுப் பத்திரத்தை அல்லது கடிதத்தைக்கொடுக்கும் யாதாமொரு அங்கத்தவர் அது ஏகமும் கண்ணிய கருத்தாய் எழுதியுள்ளது என்பதற்கு உத்தரவாதியாவார். எழுதுவோனின் நாமமும் விலாசமும் தெளிவாய் வரையப்பட்டாலன்றி யாதொரு பதிரமும் சங்கத்தின் முன்வைக்கப்படாது.

10. மனு அல்லது வேறு பத்திரம் கொடுக்கப்படும்பொழுது அப்பத்திரத்தின் பொழிப்பு சுருக்கமாய்ச் சொல்லப்படவேண்டும். ஒரு அங்கத்தவர் பிரார்க்க இன்னொருவர் அனுவதிக்க அப்பத்திரம் வாசிக்கப்படவேண்டுமோ அல்லவோவென்று கூட்டத்திற் கேள்வியாக வேண்டியது.

11. சாதாரண கூட்டங்களின் கருமங்கள் பின்வரும் ஒழுங்கின்படி நடத்தப்படவேண்டும்—

(a) நேரே முந்தின கூட்டத்தில் நடத்தப்பட்ட காரியங்களைப்பற்றிய குறிப்புகள் வாசிக்கப்பட்டுத் தேள்வை கண்ட இடத்திற் திருத்தப்பட்டபின் உறுதிப்படுத்தப்பட வேண்டும்;

(b) விண்ணப்பப்பத்திரங்கள் அல்லது மன்ருட்டுப்பத்திரங்கள் அல்லது சங்கத்திற்கு அனுப்பப்பட்ட வேறு கடிதங்கள் கூட்டத்தின்முன் கொண்டுவரப்பட்டு அவைகளில் நடக்கவேண்டிய முறையான கட்டளைகள் வரையப்படவேண்டும்;

(c) மறு கருமங்கள் பின் விவரிக்கப்படும் கட்டளைப் புஸ்தகத்தில் சொல்லப்பட்ட நிரையின்படி கவனிக்கப்படவேண்டும்.

12. ஒரு கட்டளைப் புஸ்தகம் வைக்கப்படும் அதில் ஒவ்வொரு கூட்டத்திலும் தற்கிக்க நியமமாயிருக்கும் கருமங்கள் பதியப்பட்டு வருசையாய் இலக்கமிடப்படும். "குறிப்புப் புஸ்தகம்" என்று சொல்லப்படும் வேருெரு புஸ்தகம் இருக்கவேண்டும். அதில் ஒவ்வொரு கூட்டத்திலும் நடந்தேறும் சமாச்சாரங்கள் அப்போதைக்கப்போது சம்பவிக்கும் முறையே பதியப்படும்.

அத்தியாயம் II. பிரிவு 9E (2) (b).—தெருக்கள், வீதிகள், பாலங்கள் வேலை நடைப்பித்தல்.

13. முன் ஆயத்தமாக்கி சங்கத்தாரால் அனுமதிக்கப்பட்ட மதிப்புகள் பார்த்துத்தான் பகிரங்க வேலைகளுக்காகப் பணம் விதாயமாக்கப்பட வேண்டியது.

14. சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவுபெற்ற ஆள் அல்லது ஆட்கள் எவர்கட்கும் காலை 7 மணி துவக்கம் மாலை 5 மணி வரைக்கும் தேள்வையானவும் தகுதியான பணிவிடைக்காரரோடும் கூலிக்காரரோடும், வேலைக்காரரோடும் வண்டிகள் மிருகங்கள் இன்னும் வேறுவகை சாதநங்களோடும் சங்கத்தின் எல்லைக்குட்பட்டயாதும் தெருவுக்கு அல்லது இனிப் போடக்கருத்தாயிருக்கும் தெருவிற்கு அருகாண்மையாயுள்ள அல்லது கிட்டிய எந்தக் காணிக்குள்ளும் போய் அங்கே சுவருபோட, அளக்க, தெருப்போட, வேறு வேலைபார்க்க, திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்புரவாக்க, திருத்த அல்லது வேலிபோட ஒரு பாலத்தைக்கட்ட வெட்ட, பழுதுபார்க்க, துப்புரவாக்க அல்லது அத்தெருவில் ஒரு வேலியைக், கானை, வரம்பைக், கிடங்கைத் திருத்தலாகிய இக்கருமங்களுக்காகத் தேள்வையான சகல காரியங்களையும் ஒருமித்து அல்லது தனித்தனி நடத்தத் தத்துவமுண்டு. மேலும் அவர்களுக்கு இந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ் என்ன காரியத்தையும், பணிவிடையையும், அலுவலையும் செய்வது நீதியாகும்.

15. உள்ள அல்லது போட நினைத்திருக்கும் தெருவுக்குச் சுவருபோட அளக்க, செய்ய, வேலைபார்க்க, திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்புரவாக்க, அல்லது திருத்த, கட்ட, வெட்ட அவ்ருேட்டிலிருக்கும் பாலத்தை, வேலியைக், கானை, வரம்பை, கிடங்கை, பழுதுபார்க்க, திருத்த அல்லது வேறு அதோடே சேர்ந்த வேலைகளைச்செய்யும் பொழுது அவ்வேலைகள் பார்க்கு மிடத்திலிருந்து எடுக்கப்படவேண்டிய மண், குப்பை அல்லது வேறு சாமான்களை அருகாமையாயுள்ள அல்லது கிட்ட இருக்கும் எந்த நிலத்திலும் போட மேற்சொன்னபடி உத்தரவுபெற்ற ஆள் அல்லது ஆட்களுக்குத் தத்துவமுண்டு. ஆனல் அப்படியான மண், குப்பை அல்லது வேறு சாமான்கள் நியாயமான காலத்துக்குள் அப்புறப்படுத்தவேண்டும்.

16. உள்ள அல்லது போட நினைத்திருக்கும் தெருவுக்குக் கிட்டவாக இருக்கும் காணிக்கூடாக அத்தெருவோடு அடுத்த என்ன பணிவிடையும் நடத்தும் நேரத்தில் ஏதாகுதல் அந்நேரத்துக்கு வேண்டிய தெருவொன்று போட எழுத்திலே சங்கத்தலைவரின் உத்தரவுபெற்ற எவருக்கும் தத்துவமுண்டு. இருந்தாலும் அப்படியாக நேரத்துக்கு வேண்டிய ருேட்டு கட்டிடமிருக்கும் தரைக்கூடாகவும், சுற்றி அடைபட்ட தோட்டம் வளவுக்கூடாகவும் போடப்படப்படாது.

17. தெருவுக் கருகான்மையாயுள்ள மரங்களைப் பத்தைகளை அல்லது செடிகளையும் இலைகள், கொப்புகள், மரத்தின் வேர்கள் அத்தெருவில் அல்லது அதற்கு மேலாகத் தூங்கி அதற்கு ஒரு தடையாக அல்லது மோசமாக விருந்தால் அவைகளை வெட்டி எடுத்துக கிட்டவுள்ள எந்த நிலத்திலும் வைக்கச் சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவு பெற்ற எவருக்கும் உத்தரவுண்டு. இம்முகாந்தரத்துக்காக அப்படியான மரங்களை, பத்தைகளை, செடிகளை, இலைகளை, கொப்புகளை, வேர்களை, அப்புறப்படுத்தத் தேள்வையான ஆட்களோடும், மிருகங்களோடும், ஆயுதங்களோடும் எந்தக் காணிக்குள்ளும் வளவுக்குள்ளும் புகுரத் தத்துவமுண்டு.

18. சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவுபெற்ற எவருக்கும் தான் தேள்வையென்று நினைக்கிற எந்த நேரத்திலும் எந்த தெரு ஓரத்திலும் வேலி, அடைப்பு, கிடங்கு, கான் அல்லது கட்டுப்போடத் தத்துவமுண்டு.

19. சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவுபெற்ற எவருக்கும் கான்கள், நீரோடைகள் அமைக்கவும் துப்பரவாக்கவும் அல்லது யாதொரு தெருவைத் தண்ணீர் வாய்க்காலைக் காப்பாற்றத் திருத்தப், பழுதுபார்க்க அல்லது செய்வதற்காகத் தான் தேள்வையென்று நினைக்கிற பாலங்கள் செய்யவும் அப்படியானவைகளை அப்படிப்பட்ட உள்ள அல்லது செய்யவென்று இருக்கிற எந்தத் தெரு, நீர்வாய்க்காலுக்கிட்ட உள்ள காணி பூமிக்குள்ளே சரிபண்ணவும் தத்துவமுண்டு.

20. சங்கத்தலைவரின் எழுத்திலே விசேஷ உத்தரவுபெற்ற சங்கத்தின் எந்த உத்தியோகத்தருக்கும் எந்த ருேட்டிலும் என்ன வஸ்துவையும் என்ன சாமானையும் வைத்து அச்சாமானை அவருேட்டுப் பழுதுபார்த்து முடியுமளவும் அப்பழுதுபார்ப்புத் துவங்கி முடிக்கிற காலத்திற்கு முந்திப்பிந்தி அப்பழுது பார்ப்பை லேசுபடுத்தத் தேள்வையாகயிருக்கும் அல்லது கொஞ்சக்காலத்திற்கு முன்னே பழுதுபார்க்கப்பட்ட தெருவுக்கு சேதம்வராமல் காப்பாற்றுகிறதற்காகவும் அச்சாமான்களைக் கிடக்கவிடத் தத்துவமுண்டு. ஆனல் ருேட்டாலே போகும் ஆட்களுக்கு அபாயம் அல்லது நஷ்டம் வராதபடி தடுக்கப் போதியளவு நியாயமான கவனத்தோடு ஏற்பாடுகள் செய்யவேண்டியது.

21. மேற்சொல்லியபடி உத்தரவுபெற்ற எவருக்கும் தன்னுல் அல்லது தன்கீழ் வேலைக்காறர் கூலிக்காறர், கையாட்களாக இருப்பவர்களுடனும் தேள்வையாகிய வேலைக்கு அமைந்த வண்டிகள் மிருகங்கள் மற்றும் கருவிகளுடனும் காலை 7 மணி துவக்கம் மாலை 5 மணிக்கும் உள்ள அல்லது போடவிருக்கிற தெருவுக்குச் சுவட்டுவழி கீற, அதை அளக்க போட அதில் வேலையிட, அதைத் திறக்க, மாற்ற, திருப்ப, பழுதுபார்க்க, துப்புரவாக்க, திருத்த, அடைக்க அல்லது இவைக்கு உதவியான கருமங்கள் ஏதுஞ்செய்ய அல்லது அத்தெருவில்க்கட்ட, வெட்ட, பழுதுபார்க்க, துப்புரவுபார்க்க, அல்லது அதிலுள்ள ஓர் பாலத்தை, வேலியை, கானை, கட்டை, கிடங்கைச் செய்ய அல்லது அத்தெருவோடு சேர்ந்த வேலைபார்க்கிற சங்கத்தின் உத்தியோகத்தரின் பாவிப்புக்குத் தேள்வையான நிரைகள் கட்டிடங்கள் அல்லது அவரினாளியத்தி லிருக்கும் வேலைக்காறர், வண்டி, ஆட்கள் சாமான்களுடைய் பிரயோசனத்திற்காகத் தண்ணீரை, மரத்தைச் செடியை, கல்லை, மக்கியை, களியை, அல்லது வேறேதும் சாமானை அத்தெருவுக் கருகாண்மையாயுள்ள அல்லது கிட்ட இருக்கும் நிலத்தில் தேடி, கிண்டி, வெட்டி எடுத்துக்கொண்டு எவரினுடைய காணிக்கூடாகவும் அடாத்துக்காரனுக எண்ணப்படாமல் சுமந்துபோக உத்தரவுண்டு. அப்படி யிருந்தபோதிலும் கிட்டவுள்ள வெண்பூமி அல்லது பொதுவான, கைவிடப்பட்ட நிலங்களில் போதியளவு சாமான் வசதியாய்ப் பெற்றுக்கொள்ள இயலாவிட்டாலே யல்லாமல் அப்படியான சாமானை யாதொரு வளவு வீட்டுக்குப் போகும் ஒடை, புல்லுவீதி அடைப்புக்குள் உள்ள காணி நாட்டப்பட்ட பூமி வயல் அல்லது காட்டில் இருந்து சொந்தக்காறனுடைய அனுமதி யில்லாமல் கிண்டி வெட்டி எடுத்துக்கொண்டு போகப்படாது. வெண்நிலத்தில் சாமான்கள் எடுக்கிறதானுல் உத்தரவுபெற்ற ஆள் அல்லது ஆட்கள் வசதியாய் எடுக்கக்கூடிய இடத்திலே அப்படிப்பட்ட சாமான்களை எடுத்துக்கொள்ளலாம். ஆருக்கும் சொந்தமான பூமியென்ருல் பூமியின் சொந்தக்காறனுக்கு அவருடைய நிலத்திலிருந்து எடுக்கும் எல்லாச் சாமான்களுக்காகவும் அச்சாமான்களை எடுத்துக்கொண்டு போகும்பொழுது உண்டாகிற அழிவுக்காகவும் நியாயமான வந்தி கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் சாமான்கள் எடுக்கப்படும் கிடங்குகளை அல்லது சுரங்கங்களை மனுஷனுக்கு அல்லது வேறு யாதாமொன்றுக்கும் மோசம் வருவிக்காதபடி சுற்றி அடைத்து அல்லது வேலிபோட்டிருக்கப்பட வேண்டும்.

22. உள்ள அல்லது போட எண்ணியிருக்கும் தெருவு அல்லது ரேட்டுக் கருகாண்மையாய் அல்லது கிட்டவிருக்கும் எந்தக் காணிக்கூடாவும் சங்கத்தலைவரின் எழுத்திலே உத்தரவுபெற்ற எந்த உத்தியோகஸ்தருக்கும் தான் தேவையென்று நினைக்கிறபடி எந்த தெருவை அல்லது ரேட்டைக் காப்பாற்ற, அளியாமல் பார்க்க திருத்த பழுதுபார்க்கிறதற்காக அல்லது கட்டுகிறதற்காக குழாய்கள் சுரங்கவாய்க்கால்கள் வேலைகள், பாலங்கள் செய்துவைக்கவும் எல்லாக் கிடங்குகளையும் பீலிகளையும் கான்களையும் நீர்ப்பாச்சல்களையும் செய்ய, துடைக்கத் துப்பரவாக்க அல்லது திறந்துவிடத் தத்துவமுண்டு.

III. அதிகாரம் 9 ம் பிரிவு E (2) (*d*).—பிரசித்த சந்தைகளின் ஸ்தாபனமும் அவைகளை நடப்பிக்கும் முறைமையும்.

23. ஓர் சந்தையை ஸ்தாபிக்க தீர்மானித்தால் சங்கம் அச்சந்தை எப்போது துவக்கப்படுமென்பதை குறையாது பத்துநாளைக்குமுன் அறிவிக்க வேண்டும். அவ்விதமான அறிவித்தல் பறைஅடித்துப் பிரசித்தம்பண்ணப்பட வேண்டும்.

24. ஒவ்வொரு சந்தையிலும் அறவாக்க நியமமாயிருக்கும் வாடகை சுங்கம் சலாரிஸ்கள் எவ்வளவு என்பதைக் காட்டும் ஓர் அட்டவணை ஆங்கிலேய, சிங்கள, தமிழ் பாஷைகளிலே அச்சிடப்பட்டு ஒவ்வொரு சந்தையிலும் காணத்தக்கவோர் இடத்தில் வைக்கப்பட வேண்டும். அவ்வித அறிவித்தலிலே சொல்லிய தொகைக்கு மேலதிகமாய் ஒருவன் கேட்டால் அல்லது வாங்கினால் அது நீதிக்கு விரோதமாகும்.

25. சந்தைக்கணக்கால் அறவாக்கவேண்டிய பலவாடகை சுங்கம் சலாரீஸ்கள் காலத்திற்குக்காலம் முற்பணமாக சங்கத்துக்காவது அல்லது அதன் குத்தகைக்காறனுக்காவது அல்லது அப்பணத்தை வாங்க சங்கத்தின் தத்துவம் பெற்ற எவனுக்காவது கேட்டவேளையிற் கட்டப்பட வேண்டும்.

26. மேற்கூறிய நியமிக்கப்பட்ட வாடகை சுங்கம் சலாரிஸ் கட்டப் பாத்தியப்பட்டவர் கேட்டவுடன் கட்டாவிட்டால் சங்கமாவது அல்லது அப்பணங்களைச் சேர்ந்த சங்கத்தால் உத்தரவளிக்கப்பட்டவனாவது அவ்வாடகை சுங்கம் சலாரீஸ்களைக் கொடுக்கவேண்டியவனுக்குச் சேர்ந்த அல்லது அவன் வசத்தில் அல்லது அவன் காவலிலிருக்கும் எந்த அல்லது எல்லாச் சாமான்களையும் நடுக்கட்டி விற்று அவனால் வரவேண்டிய பணத்தை அறவிடலாம்.

27. உத்தரவுச்சீட்டில்லாமல் ஒருவனும் பிரசித்த சந்தையில் ஒரு கடையைப் பிடிக்கவும் பாவிக்கவும் வைத்திருக்கவும்படாது. அந்த உத்தரவுச்சீட்டு இத்துடன் அணைக்கப்படும் A என்ற அட்சரம்கொண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட மாதிரியாயிருக்கும். அப்படியுள்ள உத்தரவுச்சீட்டின் கொந்தீஸ்களின் ஏதொன்றையும் அவன் மீறப்படாது. சந்தையிலே ஒட்டப்பட்ட நொத்தீசினால் வைத்திருக்க அல்லது விற்கப்படாதென்று சங்கத்தாரால் விலக்கப்பட்ட யாதாவொரு சாமானை யாதொருவனும் எந்தக் கடையிலும் வைத்திருக்க அல்லது விற்பனவிற்குக் காட்டப்படாது.

28. காய்கறி அல்லது கனிகள் விற்கும் கடையில் யாதொருவரும் புதிதானவோ அல்லது உப்பிட்டவோ இறைச்சியை அல்லது மீனை அல்லது சமைக்கப்பட்ட தீனை (புதுக்கனிகள் அல்லது காய்கறிகளைத்தவிர) வேறு ஏதும் சாமான்களை விற்க அல்லது விற்பனவிற்குக் காட்டக்கூடாது.

29. ஒரு கடையை ஆட்சிபண்ணுவோன் சந்தையின் ஏதொரு பகுதியையும் எவ்வகையாவது அடைக்கக்கூடாது அல்லது மேற்கட்டி அல்லது மறைப்புப் போடப்படாது அல்லது அக்கிராசனரின் உத்தரவின்றி சாயந்தரம் 9 மணிக்கும் காலமே 6 மணிக்கு மிடையில் சந்தையிலே யாதொரு சாமானையும் விடக்கூடாது.

30. சந்தையில் யாதொரு கடை அல்லது ஆசனத்தி லிருப்பவன் கடை அல்லது ஆசனத்தை அழுக்கு அல்லது கஞ்சல், குப்பை யில்லாமல் சுத்தமாய் வைத்திருக்க வேண்டியது. தோல்ப் புரவையில் தொற்றுதலான அல்லது பற்றுதலான வியாதியுள்ள ஒருவரும் ஒரு பொதுவான சந்தையின் யாதொரு கடையில் ஆசனத்தில் அல்லது இடத்தில் இருக்கவும் என்னவிதமான பண்டத்தை வைத்திருக்கவும் விற்பனவிற்கு வைத்திருக்கவும் படாது.

31. பிரசித்தச் சந்தையிலிருக்கும் அல்லது அதைப் பாவிக்கும் யாதொருவனும்—

(*a*) அச்சந்தையின் அல்லது அவ்விடத்தில் ஒழுங்குகெட்டவிதமாய் நடக்கவும்படாது அல்லது பீடை அல்லது துன்பத்தையும் செய்யக்கூடாது சந்தையில் அல்லது சந்தைக்கு அணித்தாய் அசங்கியம்பண்ணப்படாது;

(*b*) அச்சந்தையில் சமையல் வைக்கப்படாது.

(*c*) சாயந்தரம் 9 மணிக்குச் சந்தை கலைந்தபின் ஒருவன் போதிய நியாயமின்றி அங்கே தங்கத் தாமதிக்கக்கூடாது;

(*d*) சங்கத்தின் கட்டிடங்கள் கடைகள் விளக்குகள் அல்லது சந்தையிலுள்ள ஏதொரு பொருளை எப்படியாயினும் அழுக்குப்பண்ண அல்லது சேதம்பண்ணலாகாது. அல்லது அப்படியான சந்தைப் பாவிப்புக்காக வைக்கப்பட்ட தண்ணீரை அசுசிப்படுத்த அல்லது கெடுக்கவும்படாது;

32. சங்கத்தின் காரியகாறன் அச்சங்கத்தின் எல்லைக்குள்பட்ட இடத்தில் கொண்டுவரப்பட்ட அல்லது விற்பனவுக்கு வைக்கப்பட்ட போசனத்திற்குத் தகாத யாதொரு இறைச்சி, வீட்டுப்பறவை, மீன், வேட்டையாடிய மிருகம், மாமிசம், காய்கனி, பழவர்க்கம் அல்லது வேறு சாப்பாட்டிற்குரிய பொருள்களைப் பிடித்து அவ்விடத்திலுள்ள வைத்திய உத்தியோகஸ்தனிடத்திற்கு அல்லது அவரில்லாவிடில் அல்லது அவ்விடத்தி லப்படி உத்தியோகஸ்த னில்லாவிடில் போலிஸ் நீதவானிடத்தில் அல்லது போலிஸ்கோட் இல்லாவிடில் கிராமக்கோட்டுத் தலைவனிடத்திற்குக் கொண்டுபோக நீதியாகும். அப்படிக்கொத்த வைத்திய உத்தியோகஸ்தர் போலீஸ் நீதவான் கிராமக்கோட்டுத் தலைவன் அந்த இறைச்சி, வீட்டுப்பறவை, மீன், காய்கறிகள், பழங்கள், வேறெந்தப் பண்டங்களும் போசனத்திற்குத் தகாததெனக் கண்டால் அவர் அதை அழித்துப்போட அல்லது அதை விற்காதபடி அல்லது சாப்பாட்டிற்குப் பாவியாதபடி அழித்துப்போடக் கட்டளை செய்வார்.

33. பொதுவான சந்தைகள் எல்லாம் நாளாந்தம் காலமே 6 மணி துவக்கம் பின்பகல் 9 மணி வரைக்கும் திறக்கப்பட்டிருக்கும், சந்தையில் முறைமையாக வெளிச்சம் வைப்பதற்கு ஒழுங்குபண்ணுவது சங்க்த்தாரின் கடமையாகும்.

34. சந்தை எல்லைக்குள் ஒழுக்கத்தை நிலைநிறுத்துவதும், பரிபாலிப்பதும் சந்தையின் குத்தகைக்காறன் அல்லது காவற்காறனின் கடமையாகும். ஒரு பொதுவான சந்தையில் அதிகாரஞ்செய்ய அல்லது வாடகை சுங்கம், அல்லது சலாரிஸ் அறவிட அல்லது அங்கே ஒழுக்கத்தையும் சுத்தத்தையும் அனுஷ்டிக்கச்செய்ய சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒருவரை அவர் தன்கடமையில் இருக்கும்பொழுது தடைசெய்யும் அல்லது எதிர்க்கும் ஒவ்வொருவரும் குற்றத்துக்குள்ளாவார்.

35. யாதொருசாதி மீன்தின்பது அல்லது பாவிப்பது சனங்களுக்குத் தீங்குக்கிடமாயிருக்குமென்று சபைக்குத் தெரியவந்தால் அல்லது கொள்ளைநோய் பரவுங்காலத்தில் யாதும் சிலவகைப் பழங்கள் காய்கறிகள் தீங்குள்ளதெனச் சங்கத்தார் கண்டால் வைத்திய உத்தியோகஸ்தரின் சிபாரிசு ஆதாரமாக பறை அடிப்பித்து அல்லது வேறு போதிய அறிவித்தலினால் சங்கத்தாருக்கு அவசியமென்று காணப்படும் காலத்திற்கு அவ்வகை மீன் பழம் காய்கறிகளை சங்கத்தின் எல்லைகளுக்குள் உள்ள யாதொரு சந்தையிலாவது அல்லது வேறிடங்களிலாவது விற்கக்கூடாதென்று தடைசெய்யலாம். அப்படியான அறிவித்தல் கொடுத்தபின் விற்பனவிற்கு வைத்தாலும் அல்லாவிடினும் சங்கத்தார் அல்லது அக்கிராசனரின் கட்டளைப்படி பிடித்து அழித்துப்போட சங்கத்தாருக்கு நீதியாகும்.

36. சாமான்கள் ஏற்ற அல்லது இறக்கவேண்டிய நேரத்திலொழிய சந்தையு மதற்குரிய விடத்திலும் யாதொரு கரத்தை அல்லது வண்டி நிற்கப்படாது.

37. பொதுவான சந்தையின் கடையை வாடைகெடுத்திருக்கும் ஒவ்வொரு கடை அல்லது கடைக்குச் சமீபத்திற் குப்பை கஞ்சல் போட ஒரு ஏனம் வைத்திருக்க வேண்டியது. அவ்வேனம் அக்கிராசனரால் அங்கீகாரமாக வேண்டியது.

38. யாதொருவனும் அதற்கென்று வைக்கப்பட்ட ஏனத்துக்குள்ளன்றி ஒரு பொதுவான சந்தையில் அல்லது அதற்குச்சேர்ந்த இடங்களில் யாதொரு குப்பை, கஞ்சல், எலும்பு, மிருகத்தின் தோல் அல்லது வேறொன்றையும் வீசப்படாது.

39. இதன்கீழ் சொல்லியபடி அன்றி சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட பிரசித்த மாடடிக்கும் வீட்டில் கொல்லப்படாத யாதொரு மிருகத்தின் பிணத்தை அல்லது ஏதொரு பகுதியை பொதுவான அல்லது பொதுவாகாத சந்தைக்கு அல்லது இவ் அதிகாரத்தில் 27 ம் பிரமாணத்தில் சொல்லியபடி விசேஷமாய் உத்தரவுசெய்யப்பட்ட இடத்திற்கு கொண்டு வருதல் அல்லது மேற்கண்ட இடங்களில் விற்க அல்லது விற்பனவிற்கு வைக்கக்கூடாது. இவ்வுபபிரமாணத்தின் கொள்கை இத்தேசத்திற்கு இறக்குமதி செய்யப்பட்ட "ஐஸ்"சில் போடப்பட்ட இறைச்சி வேட்டையாடிய மிருகமாமிசம் மீனுக்கு வழங்காது.

40. ஒரு பொதுச்சந்தையில் ஒரு கடையை வைத்திருக்க அல்லது அதை நடத்த உத்தரவுபெற்றிருக்கும் ஒருவர் தொடர்ச்சியான இரண்டுநாளைக்கு முறையே தன் கடையை நடத்தாமலும் வேணுமென்று ஊரவர்தேவைகளைக் கவனியாமல்விட்டாலும் அல்லது போதிய நியாயமில்லாமல் சாமான் விற்கமாட்டேனென்றாலும் அப்படிப்பட்டவர் உத்தரவுச்சீட்டை அழிக்க அல்லது நிறுத்த அக்கிராசனருக்கு நீதியாகும்.

அதிகாரம் ௬ 9E (2) (*d*).—அப்பப்போறணை.

41. மனுஷர் சாப்பிடுகிறதற்குக் கோதம்பையப்பம், விஸ்கோத்து, இனிப்புமிட்டாய் சரிக்கட்டுமிடத்தை "பேக்கறி" என்னும் சொல்லுக்கு அர்த்தமாகும். அப்பேர்ப்பட்ட சாப்பாடு சரிக்கட்டுகிறதற்கு ஆயித்தப்படுத்துகிற இடத்தையும் அல்லது அப்பேர்ப்பட்ட சாப்பாட்டை சரிக்கட்டுகிறதற்குத் தேவையான சாமான்களை வைத்திருக்குமிடத்தையு மடக்கும்.

42. அக்கிராசனரிடம் இருந்த வருஷாந்த குத்தகைச்சீட்டு இல்லாமல் எவரும் ஒரு அப்பப்போறணையை வைத்திருக்கப்படாது. அப்படிப்பட்ட ஒவ்வொரு உத்தரவுச்சீட்டும் கொடுக்கப்பட்ட அந்த வருஷத்தின் மார்கழிமாதம் 31 ந் தேதி வரைக்கும் அல்லது அதை அழிக்கும்வரைக்கும் பெலப்பாகும். இந்தப்பிரமாணங்களை கவனிக்காதவர்களுக்கு உத்தரவுச்சீட்டுக் கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட அக்கிராசனருக்குத் தத்துவமுண்டு. இதுகாரணத்தில் உத்தரவுச்சீட்டு சபையில் தேசாதிபதியின் அனுமதியுடன் காலத்திற்குக்காலம் சங்கம் வேதனமாகத் தீர்மானிக்கும் செலவுகட்டி எடுக்கவேண்டும்.

43. மாக்குழைக்கிறதற்கு பாவிக்கப்படும் அறை குறைந்தகணக்கு 12 அடி நீளமும் 10 அடி அகலமுமிருக்கக்கூடிய விசாலமுள்ளதா யிருக்கவேண்டும். காற்று வந்துபோகக்கூடியதாக இரண்டு பக்கத்திலேயாகுதல் 7 அடி அகலத்திற்குக் குறையாத காற்றுவழி அறைக்குவெளியால் இருக்கவேண்டும். போறணை அறையிலிருந்து மாக்குழைக்குமறைக்கு நேரே போகக்கூடிய கதவு இருக்கக்கூடாது. மாக்குழைக்கும் ஒவ்வொரு அறையின் கூரைக்கு "சீலிங்" போட்டிருக்க வேண்டும்.

44. ஒவ்வொரு "பேக்கறி"யும் நல்லாய்க் காற்றுவரக்கூடியதாயும் நல்ல வெளிச்சமும் விளக்கூடியதாயு மிருக்க வேண்டும். எல்லாப்பக்கங்களி லிருக்கும் சுவர்கள் 7 அடி உயரத்திற்குக் குறையாமல் இருக்கவேண்டும். அவைகள் செங்கல்லால், கட்டுக்கல்லால் அல்லது கபுக்கல்லால் கட்டப்பட்டு உட்பக்கத்திற்கு சுண்ணும்பூசி ஆறு மாசத்திற்கு ஒரு தரம் வெள்ளை அடிப்பிக்க வேண்டும். கூரை நிலைநிற்கக்கூடிய சாமானால் மேய்ந்திருக்கவேண்டும். "சீலிங்"கிக்கு சுண்ணும்பூசி ஒரு வருஷத்திற்கு 4 தரம் வெள்ளையடிக்க வேண்டும். அல்லது வாணிஸ்போட்ட அல்லது பூச்சுமை அடித்த பலகைகளால் நெருக்கி அறைந்திருகக வேண்டும். நிலத்திற்கு எங்கும் சீமந்து போடப்பட்டு காணக்கூடிய கான்கள் கட்டியிருக்கவேண்டும். ஒவ்வொரு அறைக்கும் திறக்கக்கூடிய சன்னல்கள் இருக்கவேண்டும். அவைகளினுடைய முழுவிசாலமும் அறை நிலத்தின் விசாலத்தின் பதினறி லொருபங்குக்குக் குறையாமல் இருக்கவேண்டும்.

45. மாப்பிசைகிறதற்கும் அப்பம் சரிக்கட்டுகிறதற்கும் பாவிக்கப்படும் அண்டாக்களும் மற்றும் சாமான்களும் அதிகம் துப்பரவாயிருக்கவேண்டும். நிலம் துப்பரவாக்கிறதற்காக அவைகளை தூக்கிக்கொண்டுபோகக் கூடியமாதிரியா யிருக்கவேண்டும்.

46. இருபத்திநாலு மணித்தியாலத்திற்கு ஒருதரமாகுதல் நிலத்தைக் கவனமாய்ச் சுரண்டிக் கூட்டவேண்டும். கூட்டின குப்பையை உடனே ஒரு ஓட்டையில்லாத மூடப்பட்ட பாத்திரத்தில்போட்டு "பேக்கரி"யிலிருந்து ஒவ்வொரு நாளும் எடுத்துக் கொண்டுபோய்விட வேண்டும்.

47. ஒவ்வொரு "பேக்கறி"யையும் மெத்தத் துப்பரவாய் வைத்திருக்கவேண்டும். ஏதேன் கானிலிருந்து அல்லது கக்கூசிலிருந்து அல்லது குளிக்கக்கூசிலிருந்து அல்லது சுகத்திற்கிடையூறாயிருக்கும் வேறு ஏதேன் இடத்திலிருந்து வரும் நச்சுக்காற்று வராதபடி ஒவ்வொரு "பேக்கறி"யையும் வைத்திருக்கவேண்டும்.

48. ஏதேன் மலக்குழியிலிருந்து அல்லது பயலைக்கும்பத்திலிருந்து அல்லது மூடாமலிருக்கும் கானிலிருந்து அல்லது கக்கூசிலிருந்து 50 அடிக்குள் ஒரு "பேக்கறி"யு மிருக்கப்படாது.

49. மாக்குழைக்கிறதற்கும் அப்பம் சரிகட்டுகிறதற்கும் பாவிக்கப்படும் சாமான்களைத்தவிர வேறு ஏதனங்கள் அல்லது தட்டுமுட்டு சாமான்கள் அப்பப்போறணைக்கு ளிருககப்படாது.

50. நல்லாய்ப் பதப்படுத்தப்பட்டு இடைவெளியில்லாமல் சேர்ந்திருக்கும் பலகைகளால் அல்லது வேறு தீங்கில்லாத ஊறாத சாமானால் அந்த மேசைகளின் மேல்தட்டுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். அவைகளை ஒவ்வொரு நாளும் விறண்டித் துப்பரவுபண்ண வேண்டும்.

51. ஒருவிதமான சாட்டிலும் ஒரு மிருகமும் பேக்கறியில் வைத்திருக்கப்படாது.

52. தொற்றுவியாதியுள்ளவனை அல்லது "பேக்கறி"யின் முதலாளி அறியக்கூடியதாய் கொஞ்சக்காலத்திற்கு முன் அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனா யிருந்தவனை அல்லது அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனை கொஞ்சக்காலத்திற்கு முன் பராபரித்தவனை "பேககறி"க்குள் போகிறதற்கு அல்லது அந்தஇடத்திலிருந்து அப்பம் அல்லது விஸ்கோத்து அல்லது இனிப்புப்பண்டம் சரிக்கட்டுகிறதற்கு அல்லது விற்பனவுசெய்கிறதற்கு "பேக்கறி"யின் முதலாளி எடுக்கப்படாது.

53. அப்பம்செய்ய ஆயத்தப்படுத்துகிறவும் சுடுகிறவும் வேலைசெய்யும் எல்லா ஆட்களும் அப்பம் சரிக்கட்டுகிறதற்குமுந்தித் தங்களுடைய கைகளைக் கழுவவேண்டும். நெஞ்சையும் உடம்பையும் மூடக்கூடிய துப்பரவான வெள்ளைத் தொங்கல் போட்டுக்கொள்ள வேணும். ஒரு வெள்ளைத் தொப்பி அல்லது உறுமால் அணிந்துகொள்ள வேண்டும். அப்பம் விஸ்கோத்து அல்லது இனிப்புப்பண்டம் செய்கிற அல்லது விற்கிற ஆட்களைத்தவிர வேறு எவராவது மாக்குழைக்கிற அறைக்குள் பிரவேசிக்க அல்லது தரிக்கக்கூடாது.

54. அப்பம் விஸ்கோத்து அல்லது இனிப்புப்பண்டம் சரிக்கட்டுகிற வேலைபார்க்கிறவர்களின் பாவிப்புக்குச் சுத்தமான தண்ணீரும் சவுக்காரமும் வைத்திருக்கவேண்டும்.

55. விலைக்குவைத்திருக்கும் எல்லா அப்பமும், விஸ்கோத்தும், இனிப்புப்பண்டங்களும், மிட்டாய்களும் ஈ, இலையான் போகக்கூடாத நேர்த்தியாய் உண்டாககப்பட்ட கண்ணாடிப்பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும். அந்தப் பெட்டிகளை மெத்தத் துப்பரவாய் வைத்திருக்கவேண்டும்.

56. அப்பம் சரிக்கட்டுகிறதற்குப் பாவிக்கப்படும் மாவும் தண்ணீரும் மற்றும் பதார்த்தங்களும் நல்லதாயும் பழுதில்லாததாயு மிருக்கவேண்டும். நிலத்திலிருந்து மூன்றடிக்கு மேலேயிருக்கும் மேடையில் மாவை வைத்திருக்க வேண்டும்.

57. "பேக்கறி"க்குச் சுற்றிவர இருக்கும் எல்லா அழுக்கும் ஒவ்வொருநாளும் எடுபட்டு கான்கள் நல்லாய்க் கழுவியிருக்கவேண்டும்.

58. அப்பப்போறணைக்கு மட்டமாயும் அதின் பகுதியாயுமிருக்கிற இடத்தில் அது தரையிலிருந்து "சீலிங்" வரையில் அப்பப்போறணையிலிருந்து பிரிவுசெய்யப்பட்டிருந்தாலொழிய படுக்கையிடமாகப் பாவிக்கப்படாது. மலசலம் கழிக்குமிடம் குளிக்கக்கூசு அல்லது சாம்பற்குளி அப்பப்போறணைக்கு அல்லது அதற்கு தொடர்பாக இருக்கப்படாது.

59. எல்லா நியாயமான நேரங்களிலும் அப்பச்சூடு நடக்கும் எந்த நேரத்திலும் எந்த அப்பப்போறணைக்குள்ளும் அல்லது அப்பம் விற்கிறதற்குப் பாவிக்கப்படும் இடத்திற்குள் போய் சோதிக்கிறதற்கு ஒரு அங்கத்தவருக்கு சங்கத்தின் சோதனைகாறனுக்கு அல்லது சங்கத்தலைவனால் எழுத்துமூலமாய் ஏற்படுத்தப்பட்ட வேறு ஆட்களுக்கும் தத்துவமுண்டு.

60. ஒவ்வொரு அப்பப்போறணையிலும் முக்கியமான இடத்தில் இந்தப் பிரமாணங்களின் கொப்பி ஒன்று மட்டை போடப்பட்டு தூக்கியிருக்கவேண்டும்.

அதிகாரம் ரு.

சாப்பாட்டுக்கடைகளும் தேத்தண்ணீர், கோப்பிக்கடைகளும் பால்பட்டிகளும்.

61. சங்கத்தலைவன் திருப்திக்கு எல்லாச் சாப்பாட்டுக்கடைகளும் தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளும் பால்பட்டிகளும் துப்பரவாயும் சுகத்திற்கு ஏற்றமாதிரியாயும் வைத்திருக்கவேண்டும்.

62. எந்தச் சாப்பாட்டுக்கடையிலும் அல்லது தேத்தண்ணீர், கோப்பிக்கடையிலும் பாவிக்கப்படும் அல்லது அதற்குச்சேர்ந்த எல்லாப் பாத்திரங்களும், மேசை கதிரைகளும், மற்றும் தேவையான சாமான்களும் எப்பொழுதும் துப்பரவாய் வைத்திருக்கவேண்டும்.

63. எல்லாச் சாப்பாட்டுக்கடைகளினதும் தேத்தண்ணீர் கோப்பிக்கடைகளினதும் சுவர்கள் சுண்ணம்பு பூசப்பட்டு வருஷத்துக்கு மூன்றுமுறை வெள்ளையடிபட வேண்டும். அங்கேயுள்ள அறைகள் நல்லாய் காற்றுவரக் கூடியதாயும் நல்ல வெளிச்சம்வரக்கூடியதாயும் இருக்கவேண்டும்.

64. எந்தச் சாப்பாட்டுக் கடையிலும் அல்லது தேத்தண்ணீர் அல்லது கோப்பிக்கடையிலும் அதைச்சுற்றியிருக்கும் இடங்களிலும் உள்ள எல்லாக் குப்பையும் அழுக்கும் நாளாந்தம் அகற்றப்படவேண்டும்.

65. தொற்றுவியாதியுள்ளவனை அல்லது சாப்பாட்டுக்கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக் கடையின் முதலாளியறியக்கூடியதாய் கொஞ்சக்காலத்திற்குமுன் அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனாயிருந்தவனை அல்லது அப்பேர்ப்பட்ட வியாதியுள்ளவனை கொஞ்சக்காலத்திற்குமுன் பராபரித்தவனை சாப்பாட்டு கடையின் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையின் முதலாளி அந்தக் கடையில் அல்லது அதற்குக் கிட்ட வேலைபார்க்கிறதற்கு எடுக்கப்படாது.

66. அப்பேர்ப்பட்ட இடத்தில் பாவிக்கப்படும் சீனியைக் கண்ணாடி மூடிபோட்ட அகன்ற வாயுள்ள போத்தில்களில் வைத்திருக்கவேண்டும்.

67. விற்பனவிற்காக வைத்திருக்கும் எல்லாப் பணிகாரங்களையும், இனிப்புப் பண்டங்களையும் அவைபோன்ற மற்றும் பண்டங்களையும் ஈ, இலையான் போகக்கூடாத நல்லாய்ச் செய்யப்பட்ட கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருக்கவேண்டும். ஈ இலையான் விழக்கூடிய மாதிரியாய் ஒரு சாப்பாட்டுச் சாமான்களும் வைத்திருக்கப்படாது. பாவிக்கப்படும் கண்ணாடிப் பெட்டிகளை மெத்தத் துப்பரவாய் வைத்திருக்கவேண்டும்.

68. பாவிப்புக்குக் கூடாத தேத்தண்ணீர் கோப்பி அல்லது பால் அல்லது சாப்பாட்டு மிச்சம் அல்லது தள்ளுபடியான சமையல் சாமான் ஒன்றும் நிலத்தில் வீசப்படாது. அவைகளைச் சீரான பாத்திரத்திற் போட்டுவைத்து ஒவ்வொரு நாளும் அகற்றிப்போடவேண்டும்.

69. சாப்பாட்டுக்கடையடியில் அல்லது தேத்தண்ணீர் கோப்பிக்கடையடியில் கலந்த பால் விற்கவும்படாது, விற்பனவிற்குக் கொடுக்கவும்படாது, விற்பனவிற்காக வைக்கவும்படாது, அல்லது வைத்திருக்கவும்படாது. பாலின் அளவைக் கூட்டுகிறதற்கு அல்லது வெளியாய்த் தோற்றப்படுகிற அதினுடைய நிறங்குணத்தை உயர்வாய்க் காட்டுகிறதற்காகப் பாலுக்குத் தண்ணீர் அல்லது வேறு தண்ணீர்ப் பதார்த்தத்தை அல்லது வேறு சாமானைச் சேர்த்தால் இந்தப் பிரமாணத்தில் கலந்த பால் என்று சொல்லப்படும். ஆனால் வாடிக்கைக்காறருக்கு உடனே சாப்பிடுகிறதற்கு தேத்தண்ணீர் கோப்பி அல்லது குடிக்கும் பதார்த்தம் சரிக்கட்டுகிறதற்கு பால் கலந்தால், கலந்த பால் என்று கருதமாட்டா.

70. ஒவ்வொரு சாப்பாட்டுக் கடையிலும் தேத்தண்ணீர் கோப்பிக்கடையிலும் பிரதானமான இடத்தில் இந்தப் பிரமாணங்களை மட்டைபோட்டுத் தூக்கியிருக்கவேண்டும்.

௬.—புடவை வெளுக்கும் துறைகள்.

71. இந்தப் பிரிவின்கீழ் அமைந்த சட்டங்களின் முகாந்திரத்திற்காக கூலிக்கு மற்றவைகளின் பிடவைகளை வெளுக்கும் தொழில்செய்பவன் தன் கையேற்று இருக்குமிடத்தை "பிடவை வெளுக்குந் துறை" எனக் கொள்ளப்படும். மேற்சொல்லப்பட்ட வேலைபார்ப்போன் அல்லது அவனுடைய வேலைக்காறன் அல்லது அப்பேர்ப்பட்ட ஆளின் உதவிக்காரன் "பிடவை வெளுக்கிறவன்" என்று கொள்ளப்படும்.

72. பிடவை வெளுக்கிற ஒவ்வொருவனும் ஊத்தைப் பிடவைக்காக பிறம்பான அறை வைக்கவேண்டும். அது நல்லாய்க் காற்றுவிளக்கூடியதாயும் எல்லாக் காலங்களிலும் துப்பரவாய் இருக்கவேண்டும். அது வருஷத்திற்கு இருமுறை வெள்ளையடிபடவேண்டும்.

73. ஆட்கள் வசிக்கும் எந்த அறையிலாவது ஊத்தைப் பிடவை வைக்கப்படாது.

74. சங்கத்தலைவன் ஊர் சுகநயத்திற்காக பிடவைகள் கழுவுகிறதற்கு விசேஷமான இடங்கள் தேவையென்று காணும்பொழுது அப்பேர்ப்பட்ட இடங்களை நியமனம்பண்ணுவார். அப்பேர்ப்பட்ட இடங்கள் அறிவித்தல் பலகையால் காண்பிக்கப்படும்.

75. பிடவை வெளுப்போனுக்கு அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டாளுக்குத் தொற்றுநோய் பிடித்திருந்தால் 24 மணித்தியாலத்திற்குள் சுகாதார இன்ஸ்பெக்டர் மூலமாய் சங்கத்தலைவனுக்கு அறிவிக்கவேண்டும்.

76. பிடவை கழுவுவோன் அல்லது அவன் குடும்பத்தில் அல்லது வீட்டாளுக்குத் தொற்றுநோயால் பீடித்திருந்தால் பிடவை கழுவும் துறையில் எல்லா வேலையும் நிற்பாட்டவேண்டும். சங்கத்தலைவரின் உத்தரவில்லாமல் பிடவை கழுவும் துறைக்கு அல்லது அங்கிருந்து வெளியே அவ்வியாதி துவங்கினதின் பிற்பாடும் நடக்கும்பொழுதும் பிடவைகள் கொண்டுபோகப்படாது.

77. சங்கத்தலைவரின் உத்தரவில்லாமல் எந்த வீட்டிலாவது அவ்வீட்டிலிருக்கும் ஆரும் ஒரு ஆள் தொத்து வியாதியால் பீடிக்கப்பட்டு நோயாளியாயிருக்கிறதென்று நம்ப நியாயமிருந்தால் அவ்வீட்டிலிருந்து ஊத்தை உடுப்பு எடுக்கப்படாது.

78. சங்கத்தலைவனால் யார் யாருக்குப் பிடவை கழுவுகிறுனென்று கேட்டால் சீலை கழுவுவோன் அப்பேர்ப்பட்டவர்களுடைய பேர்களைக் கொடுக்கவேண்டும்.

79. ஆடு, மாடு, குதிரை, சீலை, பாய் முதலியவைகளைக் கழுவுகிறதற்குத் தலங்களையும், அத்தலங்களைப் பாவிக்ககூடிய நேரங்களையும், காலத்திற்குக்காலம் குறித்துவைப்பதற்கு சங்கத்தாருக்குத் தத்துவமுண்டு.

80. இந்த முகாந்திரத்திற்காகக் குறித்துவைக்கப்பட்ட இடங்களின் ஓர் அட்டவணை அங்கிலேய, சிங்கள, தமிழ்ப் பாஷைகளில் "கசற்" பத்திரிகையிலேயும் சங்கத்தின் எல்லைகட்குள்ளே பறை அடித்துப் பகிரங்கப்படுத்தப்படும். மேலும் இந்த அட்டவணைகள் சங்கத்தின் கந்தோரிலும் ஒட்டிவைக்கப்படவேண்டும்.

81. சங்கத்தால் அதற்கென்று குறிக்கப்பட்ட இடத்திலேயொழிய பட்டணத்தின் எந்தப் பிரசித்த தலத்திலாவது ஒருவரும் குதிரை, ஆடு, மாடு, துணி யல்லது பாய்களைக் கழுவப்படாது.

82. கழுவுகிறதற்கென்று நியமித்த எந்த இடத்திலும் ஏதும் தொற்றுநோயால் வருந்தும் எவரும் துணியையாவது வேறு எதையாவது கழுவப்படாது.

அத்தியாயம் V.—9E (2) (g).

ஆரோக்கியத்துக்குக் கேடான மாமிசம் மீன் அல்லது வேறு பண்டங்கள்.

83. சங்கத்தின் யாதொரு அங்கத்தவர் அதிகாரி அல்லது அக்கிராசனரால் அதிகாரங் கொடுக்கப்பட்ட எவரும் உதவியாள்கொண்டு அல்லது தனிமையாய் நியாயமான என்னேரத்திலும் யாதொரு சந்தை கட்டிடம் சாய்ப்பு தொழுவம் அல்லது இறைச்சி வீட்டுப்பறவை, மீன், கனி, அல்லது காய், பிஞ்சு விற்கிறதற்குப் பாவிக்கும் அல்லது மிருகங்களைக் கொல்வதற்காகப் பாவிக்கப்படும் இடங்களுக்குப் போய்ப் பார்வையிடவும் அங்கிருக்கும் யாதொரு மிருகத்தை, பிணத்தை, இறைச்சியை, வீட்டுப்பறவையை, வேட்டையாடிய மிருகத்தை, மாமிசத்தை, மீனைக்கனியை அல்லது காய்கனியை, சோதிக்கத் தத்துவங்கொடுக்கப்பட்டிருக்கிறது, யாதொரு மிருகம், பிணம், இறைச்சி வீட்டுப்பறவை வேட்டையாடிய மிருகம், மாமிசம், மீன், கனிகாய், பிஞ்சு, மனிதரின் உணவிற்கு வைத்திதிக்கிறதாகவும் உணவிற்குத் தகாததாயும் காணப்பட்டால், அவைகளைப்பற்றிக்கொண்டுபோய்க்கிட்டவிருக்கும் டாக்குத்தர், கிராமக்கோட்டு நீதவான், அல்லது பொலிஸ் நீதவானிடம் கொண்டுபோய் அப்படிப்பட்ட டாக்குத்தருக்கு அல்லது கிராமக்கோட்டு நீதவானுக்கு அல்லது பொலிஸ் நீதவானுக்கு மனுஷரின் போசனத்திற்காகக்கொண்டுவரப்பட்டிருக்கிற மிருகம், பிணம், இறைச்சிவீட்டுப் பறவை, வேட்டையாடிய மிருகம். மாமிசம், மீன், கனி அல்லது காய் கனி அப்படியான போசனத்திற்குத் தகாதெனக் காணப்பட்டால், அவற்றை அழித்துப்போட அல்லது விற்பனவுசெய்ய அல்லது போசனத்திற்குப் பாவிப்பதை தடைசெய்யத்தக்கதாய் நாசப்படுத்தக் கட்டளைபண்ணலாம்.

அத்தியாயம் VI.—பிரிவு 9E (2) (1). பாழ்நிலம் அல்லது பொதுவான நிலங்களின் பாதுகாப்பு.

84. அக்கிராசனருடைய அதிகாரமின்றி ஒருவரும் பாழான அல்லது பொதுவான நிலங்களிலிருந்து யாதொரு மணல், மண், கல், வளரும் பயிர் அல்லது மரங்களை அகற்ற அல்லது அந்நிலங்களின் மேல்ப்பரப்பை எவ்வகையாவது மாற்ற அல்லது வேறுபடுத்தவும்படாது.

85. அக்கிராசனருடைய உத்தரவின்றி சங்கத்தில் விடப்பட்ட பொதுவான நிலங்களில் யாதொரு குதிரை, மாடு, செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி கட்ட அல்லது மேயவிடக்கூடாது. அப்படியான உத்தரவு அக்கிராசனரால் அவர் பிரியப்படி ஒரு வருடத்திற்கு அல்லது ஏதும் குறைந்த காலத்துக்குக் கொடுக்கப்படும். சங்கத்தார் காலத்திற்குக்காலம் கிரமக்குஞ் சலார்கட்டி உத்தரவு பெறவேண்டியது.

86. அக்கிராசனரால் எழுத்திலதிகாரம் கொடுக்கப்பட்ட எவரும் நகரத்திற்குள் பொதுவான நிலத்தின் மேற்சுட்டிய உத்தரவு பெறுமல் கட்டப்பட்டிருக்கிற அல்லது மேயக் காணப்படும் யாதொரு குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு அல்லது மற்று மிருகத்தைப் பிடிககலாம். ஒரு ரூபாய் சலாரும் மாட்டுத் தொழுவத்தில் விடப்பட்டால் அங்கே நின்றதற்கு அறவிடவேண்டிய சலாரும் கொடுத்தாலன்றி, அப்படிப் பிடிக்கப்பட்ட மிருகங்கள் விடுதலையாக்கப்படாது.

87. பத்து நாளைக்குள் உரிமைசொல்லப்படாத பிடிபட்டிருக்கும் ஏதொரு மிருகமும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படலாம். ஏலத்தில் விற்ற காசில் 85 ம் பிரமாணத்தால் குறிக்கப்பட்ட தீர்வைகளைக் கழித்தபிற்பாடு, மிகுதியைப் பொலிஸ் கோட்டிற்கு இராசாங்கப் பாவிப்பிற்காகக் கொடுக்கப்படும்.

88. சங்கத்தார் தங்களுக்குத் தகுதியெனக் காணப்படும் கொந்தீசில் பன்னிரண்டு மாசங்களிற்கு மேற்படாத காலத்திற்கு பொதுவான மேச்சல்த்தறை அல்லது அதன் ஒரு பகுதியை வாரத்திற்கு அல்லது குத்தகையாய்க் கொடுக்கலாம்.

அத்தியாயம் VII.—பிரிவு 9E (2) (j). எல்லைபோட்டுக் காப்பாற்றுவது.

89. நகரத்திற்குள் யாதொரு வீடு தோட்டம், கட்டிடம், அல்லது காணியுடையவர் அல்லது அவை ஒன்றிற் குடியிருப்பவர் அந்த வீடு, தோட்டம், கட்டிடம் அல்லது காணியைத் தரைமட்டத்திலிருந்து நாலடி உயரத்திற்குப் பதியாத சுவர் அல்லது நல்ல வேலியால் சுற்றிடப்பட்டதாய் வைத்திருக்கவேண்டும்.

90. யாதொரு பொதுவான கட்டப்பட்ட கானுக்கு மூன்றடிக்கு யாதொரு உய்வேலி இனிமேல் நாட்டப்படாது

அத்தியாயயம் VIII.—பிரிவு 9E (2) (k). பொதுவான குளிக்குமிடங்கள்.

91. சுகசங்கத்தார் காலத்திற்குக்காலம், தீர்மானத்தினால் தக்கதாகக் காணப்படுகிற பொதுவான குளிக்குமிடங்களை வகுத்துவிடவும் அவைகள் பாவிக்கப்படும் நேரங்களைக் குறிக்கவும் நீதியாகும்.

92. பொதுவான குளிக்குமிடங்களாக விடப்பட்ட இடங்களின் ஒரு டாப்பு இங்கிலீஸ், சிங்களம், தமிழ், அரசாட்சி "கெசட்" பத்திரிகையில் பிரசுரஞ்செய்யப்பட்டு சங்கத்தின் எல்கைக்குள் பறையடிப்பித்துப் பிரசித்தப்படுத்தவும்படும்.

93. சனங்கள் குளிப்பதற்காக செலவுகொடுத்துப் பாவிக்கும் ஒவ்வொரு கிணறும் மூன்றடிக்குப் பதியாத சுவர் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்டிருக்கவேண்டும். அச்சுவருக்கு வெளிப்புறம் நிலத்தின் மேற்பரப்புக்குக்கீழ் இரண்டடித் தாள்வுக்கு சீமந்தி போடப்பட்டிருக்கவேண்டியது.

94. அப்படியான ஒவ்வொரு கிணற்றையும் அடுத்துச் சுற்றியிருக்கும் நிலம் சரியான வாய்க்காலுக்குப் போகின்ற ஒரு கட்டப்பட்ட கானுக்கு தண்ணீர் ஓடத்தக்கதான சரிவுள்ளதாயிருத்தல்வேண்டும்.

95. அப்படியான கிணற்றில் அல்லது அதற்குச் சமீபத்தில் உடுப்பு பாய் அல்லது வேறேயொன்றும் கழுவ நீதியல்ல.

96. குளிப்பதற்காக அக்கிணறுகளில் பாவிக்கப்படும் வாளிகள் குறைந்தகணக்கில் வருடம் ஒருமுறை மைபூசப்பட்டு நாளாந்தம் சுத்தப்படுத்தவேண்டியது.

97. தோல் நோய், தொற்று நோய், பற்று நோயுள்ள யாதொருவரும் மேற்சொல்லிய ஒழுங்குகளின்படி குளிப்பதற்காக விடப்பட்ட யாதொரு இடத்திலும் குளிக்கப்படாது. யாதொருவரும் தன்னுடைய அல்லது தன் பராபரிப்பிலிருக்கும் யாதொரு மிருகத்தையும் அப்படிக்கொத்த இடங்களில் போக, நிற்க, அல்லது தண்ணீர் குடிககவிடப்படாது.

அத்தியாயம் IX.—பிரிவு 9E (2) (m), (n). மாட்டுத்தொழுவங்களின் சலார்.

98. நகரத்தின் பிரசித்த ரோட்டுகளில் அல்லது பாதைகளில் திரியும் சகல மாடுகள், செம்மறி வெள்ளாடுகள் பிடிகசப்படும்பொழுது சங்கத்தாரால் அதற்கென்று ஸ்தாபிக்கப்பட்ட தொழுவங்களில் விடப்படும். அப்படியாக விடப்பட்ட ஒவ்வொரு மிருகத்தையும் மீட்டுக்கொண்டுபோவதற்கு பின்வருமாறு செலவுகொடுக்கவேண்டியது :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| பிடிப்பதற்கு ஒவ்வொன்றிற்கு .. .. .. .. | 1 | 0 |
| தொழுவத்திலிருப்பதற்கு ஒரு நாள் அல்லது ஒரு நாளின் பகுதிக்கு ஒவ்வொன்றிற்கும் .. | 0 | 25 |
| தீன்கொடுத்தால் ஒரு நாள் அல்லது ஒரு நாளின் பகுதிக்கு ஒவ்வொன்றிற்கு .. | 0 | 15 |

99. பிடிக்கப்பட்ட பத்து நாட்களுள் சொந்தை சொல்லப்படாத எந்த மிருகமும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். சலாரும் செலவும் விற்பனவுத் தொகையிலிருந்து அறவிடப்படும்.

அத்தியாயம் X.—பிரிவு 9E (2) (o). கட்டிடகட்டிடங்கள் ஆயாம்.

100. சங்கத்தலைவருக்கு 21 நாட்களுக்குமுன் எழுத்துமூலமாக செய்ய எண்ணும் வேலையை விபரித்துக்காட்டும் படங்கள் அணைத்து அறிவித்தல் பத்திரங் கொடுக்காமல் நிலையாயுள்ள கட்டிடத்தையேனும் அல்லது அப்போதைக்கு உள்ள பாவிப்புக்காகிய கட்டிடத்தையேனும் கட்டுதல் திருப்பிக்கட்டுதல் பழுதுபார்த்தல் கூட்டிக்கட்டுதல் அல்லது பெருப்பித்துக்கட்டுதலும் அப்படிப்பட்ட கட்டிடத்தின் முகப்பை எவ்விதமாயேனும் புதுப்பித்தல் பழுதுபார்த்தல் மாற்றுதல் அல்லது கூட்டுதலும் அல்லது வாய்க்கால், பாலம்கட்டுதலும், வாய்க்காலின் மேல் பலகைமுதலியன அடித்தலும்

அல்லது கக்கூஸ், ஊத்தைக்கிடங்கு கட்டுதலும், யார்செய்தாலும் அச்செய்கை கட்டளைப்பிரமாணத்திற்கும் மாறென்று காணப்படும். அப்படிப்பட்ட கட்டுவேலையை சங்கத்தலைவரில் இருந்து எழுத்து மூலமாய் உத்தரவுகிடைக்குமுன் அல்லது 21 நாட்களுக்கு முன் கொடுத்த அறிவித்தலின் காலம் முடியமுன் தொடங்கக்கூடாது.

101. சங்கத்தின் எல்லைகட்குள் குடியிருப்பதற்காக ஒரு வீட்டை அல்லது கொட்டிலைக் கட்டுதலும் அல்லது அவைகளை குடியிருப்பதற்குப் பாவிக்க விடுதலும் சங்கத்தலைவருககு 21 நாட்களுக்குமுன் அறிவித்தல் கொடுத்தாலே அன்றியும் பின் சொல்லப்படும் பிரமாணங்களுக்கு அமைந்திருந்தாலே யன்றியும் யார் செய்தாலும் அச்செய்கை கட்டளைப் பிரமாணத்திற்கு மாறென்று காணப்படும் :—

(*a*) சுவர்கள், கல், செங்கல், கபுக்கல், வரிச்சும் மண்ணும் அல்லது வேறு மெழுகி வெள்ளைபூசக்கூடிய கட்டுவேலைச் சாமான்களாலேயல்லாமல் ஒருபோதும் ஓலையால் கட்டப்படக் கூடாது.

(*b*) அப்படிப்பட்ட ஒவ்வொரு வீடும், அல்லது கொட்டிலும் அல்லது அவைகளிலுள்ள மனுஷச் சஞ்சாரத்திற்காகப் பாவிக்கப்படும் எந்த அறையாகிலும் மேற்பரப்பில் 120 சதுரங்க அடிக்குக் குறையாமலும், 10 அடி உயரத்திற்குக் குறையாமலும் தாவாரம் நிலத்திலிருந்து 6 அடிக்குக் குறையாமலும் இருக்கவேண்டும். எல்லா வீடுகளும் அல்லது கொட்டில்களும் ஓட்டால் வேயப்பட்டிருக்கவேண்டும். ஆனால் சங்கத்தலைவர் இப்பிரமாணத்திற்குப் புறநடையாகச் சில வீடுகளை கொஞ்சக்காலத்திற்கு விலக்கலாம்

(*c*) மனுஷச்சஞ்சாரத்திற்கு ஆகிய ஒவ்வொரு அறையும் குறைந்தகணக்கு 6 அடி நீளமும் 3 அடி அக்லத்திற்கும் குறையாத ஒரு கதவையேனும் 3 அடி நீளமும் 2 அடி அகலத்திற்கும் குறையாத ஒரு ஜன்னலையேனும் உடையதாயிருக்கவேண்டும்.

(*d*) வீட்டில் நிலம் அடுத்த வெளிநிலத்திற் பார்க்க எப்போதும் ஒரு அடி உயரத்திற்குக் குறையாமலிருக்க வேண்டும். ஆனால் இடத்திற்கு ஏற்க இதிற் கூடிய உயரம் வைக்கவேண்டுமென்று அஞ்ஞாபிக்கச் சங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

(*e*) திருத்தும்படி அல்லது அழிக்கும்படி எழுத்து மூலமாக அறிவித்தல்கொடுத்து ஒரு மாதத்துக்குப் பின் அப்படிச்செய்ய சொந்தக்காரன் தவறினால், இந்தப் பிரமாணத்துக்கு மாறாக கட்டப்பட்டிருககும் வீட்டை அல்லது குடிசையை அழிப்பிக்க சங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு. அப்படி அழிப்பிக்கும் செலவு சொநதககாரன் பொறுக்கவேண்டும்.

102. கீழே காட்டியிருக்கும்படி யல்லாமல் வேறுவிதமாக யாதாமொரு குடிசையை அல்லது வீட்டை சங்கத்தின் எல்லைக்குள் கட்டுகிறதற்கு, திருப்பிக் கட்டுகிறதற்கு அல்லது கூட்டிக் கட்டுகிறதற்கு ஒருவருககும் தத்துவமில்லை. கட்டப்பட்ட, திருப்பிக்கட்டப்பட்ட அல்லது கூட்டிக்கட்டப்பட்ட எந்தக் குடிசைக்கும் அல்லது வீட்டிற்கும் சுற்றிவரக் கீழே காட்டியமாதிரி இடைஞ்சல் இல்லாத காற்றுவெளி இருக்கவேண்டும். கட்டிடத்திற்குச்சேர்ந்த சுவர்களின் எப்பகுதியாகினும் அல்லது இரண்டடி ஆறு அங்குலத்திற்கு கூடியிருக்கும் தாவாரங்களாகினும் அப்படிக் காற்று உலாவவிடப்படும் வெளியுட்குட் சேர விடப்படமாட்டா. அவ் இடைவெளிப் பிரமாணங்களாவன :—

(*a*) ரோட்டு அல்லது தெருப்பக்கத்தில் நடுரோட்டிலிருந்து அல்லது நடுத்தெருவிலிருந்து 20 அடி; அது பகிரங்க வேலைப்பிரிவின் ரோட்டாயிருந்தால் 25 அடி

(*b*) குசினி, குளிக்குமிடம், கக்கூசைத்தவிர வேறு பின்னால் இருக்கும் குடிசை அல்லது வீட்டிலிருந்து 30 அடிக்குக் கூடாமல் சங்கத்தலைவன் நியமிக்கும் தூரம். இந்த வெளிநிலத்தின் அரைவாசியாகுதல் அந்த வீடு கட்டியிருக்கும் அல்லது திருப்பிக்கட்டியிருக்கும் அல்லது சேர்த்துக்கட்டியிருக்கும் நிலத்தின் சொந்தக்காரனுடையதாயிருக்கவேண்டும்

(*c*) பக்கத்திலிருக்கும் கட்டிடத்திலிருந்து 15 அடிக்குக் கூடாமல் சங்கத்தலைவன் நியமிக்கும் தூரம். இப்படி நியமிக்கப்படும் வெளியின் பிரமாணத்தின் அரைவாசியாகுதல், அந்த வீடுகட்டியிருக்கும் அல்லது திருப்பிக் கட்டியிருக்கும் அல்லது சேர்த்துக்கட்டியிருக்கும் நிலத்தின் சொந்தக்காரனுடையதாயிருக்க வேண்டும். ஆனால் சங்கத்தலைவன் யுக்திப்படி விசேஷகாரணம் இந்தக் கட்டளைச்சட்டத்தைபற்றி இச்சிலவேளைகளில் இளக்கி உத்தரவுகொடுக்கலாம்; ஆனால் அப்படி உத்தரவுகொடுப்பதால் கட்டவென்று அல்லது திருப்பிக்கட்டவென்று அல்லது கூட்டிக்கட்டவென்று இருக்கும் வீட்டை அல்லது குடிசையை அல்லது பக்கத்திலிருக்கும் குடியிருக்கப்படும் அல்லது குடியிருக்க எண்ணியிருக்கும் வீட்டை அல்லது குடிசையை சுகத்திற்கு ஏற்ற மாதிரியாய் அல்லது வசதியாய் வைத்திருக்கிறதற்கு தடையாயிருக்கமாட்டாதென்று கண்டால் அல்லாமலும் அப்படி உத்தரவுகொடுப்பதால் ஏதேன் ரோட்டை அல்லது தெருவை இனிமேல் உண்டாக்கிறதற்கு அகலிக்கிறதற்கு அல்லது பெருப்பிக்கிறதற்கு தடையாயிருக்கமாட்டாதென்று கண்டால் அல்லாமலும் சங்கத்தலைவன் அவ்வுத்தரவு கொடுக்கமாட்டார். ஆனால் அவ்விதமாக காற்று வெளிக்காக சேமிககப்பட்ட நிலத்தில் ரோட்டுக்கரைக்கு ஆகத் தூரத்திலுள்ள பக்கத்தில் சங்கத்தலைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடத்தில் ஒரு குசினியை குளிக்குமிடத்தை அல்லது கக்கூசைக் கட்டுகிறதற்கு சங்கத்தலைவன் உத்தரவுகொடுக்கக்கூடும். ஆனால் ஊத்தை அழுக்கு முதலியவைவயைக் கொண்டுபோகிறதற்காகச் சங்கத்தால் ஒரு ஒழுங்கை உண்டாககியிருந்தால் அல்லது குறித்திருந்தால் அல்லது உண்டாக்க எண்ணியிருந்தால் அவ்வொழுங்கைக்கு பக்கத்தில் அப்பேர்ப்பட்ட கக்கூசைக் கட்டவேண்டும்.

### அத்தியாயம் XI.—பிரிவு 9 E (2) (*s*).

### மட்டை நனையப்போடும் கொட்டுகள்.

103. சுகாதாரசங்க எல்லைக்குள், சுகாதாரசங்கத் தலைவரின் உத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) பெறாமல் தேங்காய் மட்டை நனையப்போடுவதற்காக ஒருவனும் கொட்டுக் கட்ட அல்லது கட்டப்பட்ட கொட்டைப்பாவிக்ககூடாது; பின்வரும் ஒழுங்குகளைக் கைகொள்ளாத ஒருவனுக்கு உத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) கொடுக்காதிருக்க இத்தால் சங்கத்தலைவர் தத்துவம் பெற்றிருக்கிறார். சுகாதார சங்கம் காலத்திற்குக்காலம் தீர்மானித்த சலார் கொடுத்து இவ்வுத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) பெற்றுக்கொள்ளப்படும்.

104. இவ்வொழுங்குகளுக்கு மாறாக ஒரு முறை அல்லது பலமுறையாவது ஒரு நியாயத் தலத்தில் மாறாக நடந்து தண்டனைவிதிககப் பெற்றால் இவ்வதிகாரத்தின்படி சுகாதார சங்கத்தலைவர் கொடுத்த உத்தரவுப்பத்திரத்தை (லைசன்ஸ்) இரண்டாம் அல்லது அதன்பின் அடுத்தமுறை தண்டனைசெய்யும்போது அழித்துவிடுவது ஒழுங்காயிருக்கும். அப்படியாகக் குற்றப்பட்டவனுக்கு சுகாதார சங்கத்தலைவர் தன் இஸ்டப்படி வேறு உத்தரவுப்பத்திரம் (லைசன்ஸ்) கொடாமல் மறுத்துவிட அதிகாரமுடையவராயிருக்கிறார்.

105. சுகாதார சங்கத்தலைவர் உத்தரவுப்பத்திரத்தில் (லைசன்ஸ்) அக்கொட்டின் விசாலத்தையும் இடத்தையும் சுட்டிக்காட்டத் தத்துவம்பெற்றிருக்கிறார். உத்தரவுப்பத்திரத்தில் (லைசன்ஸ்) காட்டிய விசாலத்திற்குமாறாகக் கொட்டுக் கட்டு மல்லது பாவிக்கும் ஒவ்வொருவனும் குற்றத்திற்கு ஆளாவான்.

### அத்தியாயம் IX. பிரிவு 9 E (2) (*t*).—துப்பரவிற்குப் பொதுப் பிரமாணங்கள்.

106. சுகசங்கத்தின் எல்லைக்குள்ப்பட்ட இடங்களின் சகல சொந்தக்காறர் வாடகை கொடுத்திருப்பவர் அல்லது குடியிருப்போர் அவற்றை சகல களைபூண்டுகள் பெரும் செடிகள் துர்க்கந்தமான பயிர்கள் மற்றும் சகல குப்பைகூளங்களிலிருந்தும் துப்பரவாய் வைத்திருக்கவேண்டியது.

107. சங்கத்தின் உத்தரவில்லாமல் யாதொருவரும் நகரத்தின் எல்லைக்குள் கூலிக்கல்லது வாடகைக்குக் கொடுப்பதற்காக யாதொரு மாட்டுத் தொழுவமும் அல்லது மாடு தங்குமிடத்தை வைத்திருக்கக்கூடாது. அக்கிராசனர் சனங்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க அவசியமெனக் கவனிக்கிற நிபந்தனைகளை அவ்வுத்தரவுச்சீட்டு அடக்கியிருக்கும். அப்படியான மாட்டுத்தொழுவம் அல்லது மாடு தங்குமிடத்தை உடையவர் அப்படியான நிபந்தனைகளைக் கவனிக்கக் கட்டுப்பட்டிருக்கின்றனர். இந்தப் பிரமாணத்தின்கீழ் கொடுபடும் எந்த உத்தரவுச்சீட்டும் செலவில்லாமல் கொடுபடும்.

108. ஒவ்வொரு குதிரை லாயம் மாட்டுத் தொழுவம் மாடு தங்குமிடம் அல்லது காலை யுடையவர் அல்லது வாடகைக்காறன் அவற்றை ஒட்டினால் அல்லது இரும்புக் கூரையினால் மூடி செங்கல்லை அல்லது பொடிக்கல்லுச்சேர்ந்த சிமேந்து அல்லது கிசில் பதிப்பித்தும் அக்கிராசனர் கட்டளைபண்ணுகிற விதமாய் கட்டப்பட்ட ஒரு மூடப்பட்ட வக்கில் மூத்திரத்தையும் அழுக்குநீரையும் கொண்டுபோவதற்காக இணக்கமாய்த் தழுவிசை அல்லது சிமேந்திடப்பட்ட கான் அமைத்து வைத்திருக்கவேண்டியது. குறித்த வக்கிலுள்ள சாமான் சொந்தக்காறன் அல்லது வாடகைக்காறனுடைய செலவில் அகற்றி அதனால் யாதொரு துன்பமும் நேரிடாதபடி அகற்றிப்போடவேண்டியது. அப்படியான ஒவ்வொரு லாயம் மாட்டுத் தொழுவம் மாடு தங்குமிடம் காலையும் ஒவ்வொரு நாளும் கழுவிச் சுத்தமாக்கி குறைந்த கணக்கில் மூன்று மாசத்திற் கொருமுறை வெள்ளையடிக்கவேண்டும். சாணியும் எருவும் குறித்த லாயம் மாட்டுத்தொழுவம் மாடு தங்குமிடம் அல்லது காலையின் சொந்தக்காறன் அல்லது வாடகைக்காறனால் சங்கத்து வேலைக்காறரால் அகற்றப்படும்படியாக வெளிப்புறத்தில் ஒரு சரியான கொள்கலத்தில் போடப்படவேண்டும்.

109. சுகசங்கத்தின் எல்லைக்குள் தோல் பதனிடுஞ் சாலை, செங்கல்சுடுமிடம் சுண்ணம்புச் சூளையாகப்பாவிக்கப் படுமிடங்களின் சொந்தக்காறன் அல்லது வேலைகொள்பவன் அல்லது வண்டில் நிறுத்துமிடம், மாடுவிடுமிடம், அப்பப்போறணை, வண்டி செய்யுமிடம், அல்லது கைத்தொழில் செய்யுமிடத்தில் வேலைகொள்பவர் சகல ஊத்தை, அழுக்கு, குப்பைகளை ஒவ்வொரு 24 மணித்தியாலத்திற்கு இரண்டுமுறை அதாவது காலமே 6 மணிக்கும் 8 மணிக்கு மிடையிலும், சாயந்தரம் 4 மணிக்கும் 6 மணிக்கு மிடையிலும் அகற்ற அல்லது அகற்றுவித்து அக்கிராசனர் உத்தரவுகொடுத்த விடங்களில் போடவேண்டியது.

110. ஒவ்வொரு வண்டில் விடுமிடமும் மாட்டுப்பட்டி ஆட்டுப்பட்டிகளும் அக்கிராசனரின் திருப்திக்கு தளுவிசை போட்டு கான்வைக்க வேண்டியது. தங்களுடைய இடங்களிலிருந்து தூசி சாம்பல் குப்பை கஞ்சல் மறுகூளங்கள் சங்கத்தின் தெருக்கூட்டிகளால் அகற்றப்படவேண்டுமென்று விரும்புகிற சகல வீட்டுக்காறரும் மறுபேரும் அவற்றை நாள்தோறும் காலமே 6 மணிக்கும் 8 மணிக்குமிடையில் தங்கள் தங்கள் வீடுகள் தொழில்ச் சாலைகளுக்குப் புறத்தே றோட்டருகில் சரியான பெட்டிகளில் அல்லது வேறு கொள்கலத்தில் போட்டுவைக்க வேண்டும். யாதாமொருவர் அப்படிப்பட்ட தூசி சாம்பர் குப்பை கஞ்சல் அல்லது கூழத்தை மேலேசொல்லியபடி பெட்டியில் அல்லது கொள்கலத்தில் வைத்தாலன்றியும் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னும் யாதொரு தெருவில் வைப்பது அல்லது வைப்பிப்பது நீதியாயிராது. ஒவ்வொருவரும் அப்பெட்டிகளை அல்லது கொள்கலங்களைத் தெருக்கூட்டிகள் அவற்றை வெறுமையாக்கியபின் அரை மணித்தியாலத்திற்குள் அகற்றிப்போட வேண்டியது.

111. சுகசங்கத்தாரின் எல்லைக்குள்ளிருக்கும் யாதொரு வீடு கட்டிடம் அல்லது அடைப்பு அல்லது இடமுடையவனை அல்லது அவற்றில் குடியிருப்பவரை அக்கிராசனர் எந்தக் காலத்திலாவது அந்த வீட்டில் அல்லது கட்டிடம் அடைப்பு அல்லது இடங்களில் அல்லது அவற்றிற்குச்சேர்ந்த கக்கூசு, குளி, அல்லது சிறுநீர்கழிக்குமிடத்தின் அழுக்குகளை அக்கிராசனர் எழுத்தில் நொத்தீசால் அந்நொத்தீசில்க் கண்டிருக்கிற நேரத்திற்குள் அதிற் சொல்லப்பட்ட இடம் அல்லது இடங்களிற்கு அகற்ற அல்லது அகற்றுவிக்கக் கேட்பது நீதியாகும். சொந்தக்காறன் அல்லது குடியிருப்பவன் அவனுக்கு நொத்தீசு கொடுக்கப்பட்ட நேரத்திலிருந்து ஏழுநாட்களுள் நொத்தீசின் பிரகாரம் வேண்டிய வைகளைச் செய்யத்தவறினால் அக்கிராசனர் வேண்டிய வேலைகளைச் செய்விக்கலாம். அம்முகாந்தரத்திற்காக வேண்டிய கூலியாட்கள் உபகாரணங்கள் சாமான்களுடன் வீடுகள் வெளிவீடுகள் கட்டிடங்கள் அடைப்புகள் இடங்களிலும் அவைகளுக்குள்ளும் உட்செல்ல அக்கிராசனருக் கதிகாரமுண்டு. அதிற் செல்லும் செலவு சொந்தக்காறனால் சங்கத்திற்குச் செல்லுமதியான கடனைப்போல அறவிடப்படும்.

112. மலசல பாதைமறைவிடம், கசுமாலக் குழி, அல்லது சிறு நீர்கழிக்கும் இடங்களிலுள்ள அழுக்குகளை வீடு, கட்டிடம் அல்லது வளவுகளுள் அல்லது குடியிருக்கும், கிரகம், கிணறு, நீரோட்டம் அல்லது வாய்க்காலின் 100 அடிக்குள் புதைக்கும் அல்லது புதைப்பிக்கும் அல்லது போடும் அல்லது போடுவிக்கும் எவரும் குற்றத்திற்குள்ளாவார், அறிவித்தல் பெற்றுக்கொண்டவுடன் அவற்றை அக்கிராசனர் சொல்லும் நேரத்திற்குள் அவர் குறிக்குமிடத்தில் அகற்ற வேண்டும். குறிக்கப்பட்ட காலத்திற்குள் நொத்தீசின் கேள்விப்படி செய்யாவிடில் அக்கிராசனரும் அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர் அல்லது தொழிலாளர் அந்த வீடு, கட்டிடம் அல்லது வளவுகளிற் புகுந்து தேள்வையான வேலைகளைச் செய்விக்கலாம் அதனால் செல்லும் செலவு அதுசெய்யத்தவறினவரால் இறுக்கப்பட வேண்டியது. அத்தொகை எவ்வளவென்பதை விசாரித்துத் தீர்மானிக்கப்படும். சங்கத்திற்குச் சொந்தக்காரனால் சபைக்குச் செல்மதியான கடனைப்போல் தீர்மானிக்கப்பட்ட தொகை அறவாக்கப்படும்.

113. யாதொரு வீடு அல்லது இடத்திற்குள் அல்லது அவ்விதத்தில் யாதொரு மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது பன்றி செத்தால் குடியிருப்பவர் அது செத்து நாலுமணித்தியாலத்திற்குள் இரவிற் செத்தால் விடிந்து நாலுமணித்தியாலத்திற்குள் அப்பிணத்தை தன் சொந்தச் செலவில் அதற்கென்று அக்கிராசனரால் நியமிக்கப்படுமிடத்திற் ககற்றவேண்டும் அல்லது சங்கத்தின் அதிகாரிக்கு சாவை அறிவிக்க வேண்டும். பிந்தினவிதமானால், பிணத்தை அகற்றி அடக்கஞ்செய்யுஞ் செலவுகளை அக்கிராசனர் தீர்மானிக்கும் பிரகாரங் கொடுக்கவேண்டும்.

114. சகல கக்கூசுகளும் வாழி மண்ல் பாவிக்கும் கிரமமாயிருக்கும் வழி மணல் பாவிக்கும் முறையுள்ள கக்கூசை உடைய அல்லது பாவிக்கும் ஒவ்வொரு வீட்டுக்காறன் சொந்தக்காறன், வாடைகொடுத்திருப்பவன் அல்லது குடியிருப்பவன் சங்கத்தின் அக்கிராசனருடன் மறு ஒழுங்குபண்ணிக்கொண்டா லொழிய சுகசங்கத்தாரின் நரகல் குழியிடத்தில் நாளாந்தம் போடவேண்டியது.

115. சங்கத்தின் எல்லைகளுக்குள் யாதொரு மரங்கொப்பு அல்லது காய் அக்கிராசனரால் பார்வையிடப்பட்டு அதுயாதொரு வீடு அல்லது கட்டிடத்தின்மேல்விழுந்து அதில் குடியிருப்பவர்களை எப்படியும் தீங்குசெய்யக்கூடியதாயிருக்குமென்று மதிக்கப்படின் அல்லது யாதொரு தெருவின்மேல் எப்போவாகினும் தொங்கிநிற்குமாகில் அந்த மரத்தை, கொப்பை அல்லது காயை வெட்டி அகற்றும்படி அந்த மரம் நிற்கும் நிலத்தின் சொந்தக்காறன் அல்லது அதில் குடியிருப்பவனுக்கு எழுத்தில் நொத்தீசு கொடுக்கும்படி செய்வதும் அப்படி நொத்தீசு கொடுபட்டு 24 மணித்தியாலத்துக்குள் சொந்தக்காறன் அல்லது அதில் குடியிருப்பவன் வெட்டி அகற்றாவிடில் அக்கிராசனர் அல்லது அவரால் எழுத்தி லதிகாரங்கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தன் அல்லது தொழில்காறனும் அவ்விடத்தில் சென்று அவ்வேலையைசெய்விக்கலாம். அதனால் உண்டான செலவு அப்படியான சொந்தக்காறன் அல்லது குடியிருப்பவனால் கொடுபடவேண்டியது. விசாரித்துத் தீர்மானித்து சொந்தக்காறன் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனாக அறவிடப்படும்.

---

## அட்டவணை A.

சலார் ரூ. ————

———— இருக்கும் ———— ஆகிய இந்த தத்துவத்துண்டு காட்டுபவர் உப பிரமாணங்களுக் கமைய ———— சந்தையில் ———— இலக்கக் கடையை ———— திற்குக் கையாள உத்தரவு பெற்றிருக்கிறார்.

————

சுகசங்க அக்கிராசனர்.

## காணி விற்பனவுகள்.

No. 1,549,, E. P.—1922 ம் ஆண்டு ஆனிமாதம் 22 ந் திகதி, வியாழக்கிழமை காலை 10 மணி யளவில் தன் ஆபிசில் கீழ் மாகாணத்து திருக்கோணமலை கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது நீக்குவிடப்படும் அல்லது வேறுமாதிரியாக விற்கப்படும். 28 காணித்துண்டுகள் கீழ் மாகாணத்து திருக்கோணமலை டிஸ்திறிக்கு கொட்டியாபுரம், தம்பலகமம் கட்டுக்குளம் கிழக்குப் பகுதியிலிருக்கின்றது.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்பு விலை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பிளான் இல. 5,624. குறிச்சி—சின்னக்கிணியாய். உரித்தாளி—அரசாட்சியார். | | | | | | |
| 1 | கண்டலடியூற்றுவளவு | கே. அவுக்காசின் கூட்டிப்பிடித்தது | தென்னந்தோட்டம் .. | 0 | 0 | 16 | 43* |
| 2 | ஷை .. | கே. செயநம்பு ஷை .. | ஷை .. | 0 | 1 | 3 | 108·6*† |
| 5 | ஷை .. | எஸ். சினி ஷை .. | ஷை .. | 0 | 0 | 11 | 62·6*† |
| | பிளான் இலக்கம் 4,622. குறிச்சி—ஆலங்கேணி. உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 2215 | சருவக்காடு .. | கே. கே. சின்னத்தம்பி-தற்போது கே. கதிர்காமன் வாடகைக் கட்டி செய்கைபண்ணுகிறது | தாபரவஸ்த்துக்கேற்றது .. | 0 | 3 | 37 | 20 |
| | பிளான் இலக்கம் 5,680. குறிச்சி—உப்பாறு. உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | நானல்புல்லுமடுவயல் .. | எஸ். சின்னத்தம்பி கூட்டிப்பிடித்தது | நெல்வயல் .. | 1 | 1 | 17 | 31 |
| 2 | ஷை .. | ஷை .. | தென்னந்தோட்டம் .. | 0 | 1 | 5 | 21 |
| 3 | ஷை .. | — .. | தெருவுக்கு விடப்பட்டது .. | 0 | 2 | 0 | —‡ |
| 4 | நானல்புல்லுமடுதரை .. | — .. | வண்டிப்பாதைக்கு விடப்பட்டது | 0 | 1 | 10 | —‡ |
| 5 | ஷை .. | எஸ். சினித்தம்பி | நெல்லுக்குத்தகுந்த வெளிநிலம் | 3 | 3 | 6 | 20 |
| 6 | ஷை .. | — .. | தெருவுக்கு விடப்பட்டது .. | 0 | 2 | 14 | —‡ |
| 8 | ஷை .. | எஸ். சினித்தம்பி | நேல்லுக்கு தகுந்த வெளிநிலம் | 1 | 1 | 32 | 20 |
| 9 | நானல்புல்லுமடுவயல் | ஷை .. | நெல்வயல் .. | 0 | 1 | 3 | 32 |
| | பிளான் இலக்கம் 5,297. குறிச்சி—தம்பலகமம். உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | முள்ளியடிக்காடு .. | — .. | வளிக்குவிடப்பட்டது .. | 0 | 0 | 21 | —‡ |
| 2 | ஷை .. | கே. கதிர்காமர் .. | தாபரவஸ்துக்குஏற்றது .. | 0 | 2 | 36 | 18 |
| 9 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 3 | 23 | 18 |
| 10 | ஷை .. | — .. | பாலம்போட்ட ஆற்றுக்குவிடப்பட்டது | 0 | 1 | 0 | —‡ |
| | பிளான் இலக்கம் 5,677. குறிச்சி—கிளிவெட்டி. உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | கீத்துபத்தைஅலவரை அருகு அல்லது வட்டக்குளிவெட்டை | — .. | தெருவுக்கு விடப்பட்டது .. | 0 | 1 | 20 | —‡ |
| 2 | ஷை .. | காத்தமுத்து வேலுப்பிள்ளை .. | நெல்லுக்குத்தகுந்த வெளிநிலம் | 2 | 0 | 1 | 24 |
| | பிளான் இலக்கம் 5,227. குறிச்சி—மலைமூந்தல். உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 1 | செம்பிக்குளம் .. | பத்தர்வேலனால் செய்கைபண்ணப்படுகிறது .. | நெல்வயல் .. | 1 | 3 | 23 | —§ |
| 2 | ஷை .. | கணபதி கந்தன் .. | ஷை .. | 1 | 3 | 0 | —§ |
| 3 | ஷை .. | முத்துகணபதியால் செய்கை பண்ணப்பட்டது | ஷை .. | 1 | 2 | 7 | —§ |
| 4 | ஷை .. | வீரன் கந்தன் .. | ஷை .. | 1 | 1 | 16 | —§ |
| 5 | ஷை .. | பத்தினியர்முத்து .. | ஷை .. | 1 | 2 | 21 | —§ |
| 6 | ஷை .. | மூத்தவன் காத்தார் .. | ஷை .. | 1 | 2 | 5 | —§ |
| 7 | ஷை .. | கணபதிபத்தன் .. | ஷை .. | 2 | 0 | 28 | —§ |
| 8 | ஷை .. | முத்துவயிரன் .. | ஷை .. | 1 | 3 | 29 | —§ |
| | பிளான் இல. 5,608. குறிச்சி—அமரிவயல். உரித்தாளி—அரசாட்சி. | | | | | | |
| 2 | முத்தர்தறை .. | வீ. சோமசுந்தரம் .. | சூட்டுக்களம் .. | 0 | 1 | 36 | 16 |
| 3 | தில்லடிமடு .. | ஷை .. | நெல்வயல் .. | 0 | 1 | 10 | 16 |

* காணிக்கும் அதன் பிரயோசனங்கட்கும் இடப்பட்ட விலை.
† பணம் கட்டத் தவறியதால் திரும்பவும் பிரசித்தப்படுத்தப்பட்டது.
‡ விற்கப்படமாட்டாது.
§ பிரதான பொருத்தனைக்கடக்கமாய்த் தீர்க்கப்படும்.

இவைகளைப்பற்றிய மேலதிக விளம்பரங்கள் திருகோணமலை உதவி ஏசன்றுத்துரையிடத்திலும் படங்கள் நில அளவைக் கந்தோர்த் தலைவரிடத்திலும் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
1922 ம் ஆண்டு வைகாசிமீ 2 ந் உ.

பீ. ஹோர்ஸ்பரோ,
அக்றிங் கொலோனியல் சக்கிறுத்தார்.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலகச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் லொஹுவகொடவில் ஒரு ரேஸ்ட்டை நோக்குகிற என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளே, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 17,787. குறிச்சி—லொஹுவகொட.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொறஹுகொடகெல .. | ஒரு மரங்களு மில்லாத தோட்டம் .. | ஜோன் பெரீரா .. | 0 | 0 | 0·4 |
| 2 | ஷை .. | ஒரு தென்னங்கண்டுள்ள தோட்டம் .. | முடி .. | 0 | 0 | 6·2 |
| 3 | ஷை .. | ஒரு மரங்களு மில்லாத தோட்டம் .. | ஜோன் பெரீரா .. | 0 | 1 | 2·4 |
| 4 | ஷை .. | ஷை .. | முடி .. | 0 | 0 | 11·6 |
| 5 | ஷை .. | ஒரு தென்னைமரம் உள்ள தோட்டம் .. | ஜோன் பெரீரா .. | 0 | 0 | 23·2 |
| 6 | ஷை .. | ஒரு தென்னைமரமு மில்லாத தோட்டம் .. | முடி .. | 0 | 0 | 16·5 |
| 7 | ஷை .. | இரண்டு தென்னங்கண்டுகள் உள்ள தோட்டம் | ஜோன் பெரீரா .. | 0 | 0 | 3·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஹூ மேமாசம் 29 ந் தேதியிலன்று 12 மணிககு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிகும் உரித்துகளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி, ஜே. ஜி. பிறேசர்,
1922 ம் ஹூ ஏப்பிறில்மீ 28 ந் உ. மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மகாஓயாக் குளததின்கீழுள்ள காணிகளின் நெற்செய்கையைச் சீர்ப்படுத்துவதாகிய என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,670. குறிச்சி—மகாஓயா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | மெதமுத்தத்துவகும்புற .. | நெற்காணி .. | ம. தா. மு. க. மீ. முகையதீன் முத்துப்பட்டாணியும் கம்பனியாரும் | 1 | 0 | 0 |
| 3 | மெதமுத்தத்துவகும்புறவும் மெதக்கும்புறவும் முத்துப்பட்டாணிகேகும்புறவும் | ஷை .. | ஷை .. .. | 37 | 1 | 30 |
| 4 | மெதமுத்தத்துவகும்புறஅத்மகே | காடு .. | ஷை .. .. | 1 | 1 | 20 |
| 5 | மெதமுத்தத்துவகும்புற, மெதகும்புற, முத்துப்பட்டாணிகேகும்புற | நெற்காணியும் ரேஸ்ட்டிலோர் பகுதியும் | ஷை .. .. | 0 | 2 | 30 |
| 6 | முத்துப்பட்டாணிகேகும்புற .. | நெற்காணி .. | ஷை .. .. | 0 | 2 | 21 |
| 7 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 2 | 0 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஹூ ஆனி மாசம் 19 ந் தேதியிலன்று காலை 10 மணிக்குச் செங்கலடியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களேயும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி, சி. வீ. பிறேயின்,
1922 ம் ஹூ சித்திரைமீ 29 ந் உ. கீழ்மாகாண அரசாட்சி ஏசண்டர்.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு-திரிகோணமலை றெயிற்பாதை திறப்பதாகிய பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளே, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,674. குறிச்சி—கோரகல்லிமடு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | நாகவத்தை .. | திறப்பான பாணிலம் .. | செங்கல்லடியிலிருக்கும் வே. போ. செல்லையா | 0 | 0 | 0·6 |
| 3 | ஷை .. | ஒரு தென்னம்பிள்ளை (ஒரு வருஷத்து) உள்ள வளவு | முடிக்குரியது, செங்கல்லடியிலிருக்கும் வே. போ. செல்லையா வென்பவரால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | 0 | 0 | 0·7 |

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 4 | பறங்கியமடு அல்லது பொங்கேணித்தோட்டம் | ஆறு வருஷத்து இரண்டுதென்னைமரமுள்ள வளவு | முடிக்குரியது, சேவியர், ஜேம்ஸ் பெறரு வென்பவர்களால் கூட்டிப் பிடிக்கப்பட்டது | 0 | 0 | 5·9 |
| 5 | ஷை .. | தென்னைவளவு .. | சந்திவெளியிலிருக்கும் எவ். ஆற். சேவியர், எல். ஜீ. ஜேம்ஸ் பெறெரு, எம். கே. எஸ். ஆஜீயார், வ. வி. காத்தமுத்து, கே. கண்ணப்பன் | 1 | 0 | 17·2 |
| 6 | ஷை .. | 3 வயது தொடக்கம் 6 வயதுள்ள தென்னைமரமுள்ள ஓர் வளவு | முடிக்குரியது, சேவியர் என்பவராலும் மற்றவர்களாலும் கூட்டிப் பிடிக்கப்பட்டது | 0 | 0 | 18 |
| | | குறிச்சி—சந்திவெளி. | | | | |
| 7 | வெம்புத்தோட்டம் .. | திறப்பான பாண்நிலம் .. | மட்டுக்களப்பு—மெஸ். அப்புக்காத்து நாகப்பர் | 0 | 1 | 4 7 |
| 10 | ஷை .. | தென்னைவளவு .. | ஷை .. | 0 | 2 | 33·6 |
| 11 | ஷை .. | ஒரு வயது தொடக்கம் 2 வயதுத் தென்னம்பிள்ளைகளுள்ள ஓர் வளவு | முடிக்குரியது, மெஸ். நாகப்பரென்பவரால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | 0 | 0 | 15·6 |
| 12 | ஆத்தாத்துமடுப்புள்ளிக் காலைப்பூமி | திறப்பான பாழ்நிலம் .. | மட்டுக்களப்பு—செ. இ. நாகுத்தம்பி | 3 | 1 | 11·2 |
| 14 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 3 | 11·5 |
| 17 | கும்பிளிப்பிட்டியன்மடு | காடு .. | மட்டுக்களப்பு—சேதுகாவலர் .. | 0 | 0 | 2·5 |
| 18 | ஷை .. | சிறப்பான பாழ்நிலம் .. | சந்திவெளி—கணபதி வேலாத்தை | 0 | 1 | 20 |
| 19 | ஷை .. | தண்ணீர்மடு .. | ஷை | 0 | 0 | 4·1 |
| 21 | ஷை .. | தென்னைவளவு .. | பத்தினியர் பாறுவதி | 0 | 0 | 15 |
| 22 | ஷை .. | ஒரு வருஷத் தென்னைமரமுள்ள ஓர் வளவு | முடிக்குரியது. ஆஜியார் என்பவரால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | 0 | 0 | 3 |
| 23 | ஷை .. | ஒரு வயது தொடக்கம் 6 வயதுள்ள தென்னைகளடங்கிய ஓர் வளவு | ஷை .. | 0 | 1 | 25·7 |
| 24 | ஷை .. | ஷை .. | எம். கே. எஸ். ஆஜியார் .. | 0 | 2 | 24·3 |
| 25 | ஷை .. | தண்ணீர்மடு .. | ஷை .. | 0 | 0 | 12·4 |
| 27 | ஷை .. | 6 மாசத்தென்னம்பிள்ளை தொடக்கம் 25 வருஷத்துத் தென்னம்பிள்ளைகளுள்ள வளவு | முடிக்குரியது ஆஜியார் என்பவரால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | 0 | 1 | 12 7 |
| 28 | ஷை .. | வீடும் வளவும் .. | எம். கே. எஸ். ஆஜியார் .. | 1 | 1 | 17·2 |
| 29 | ஷை .. | ஒரு வயதுத் தென்னம்பிள்ளையுள்ள ஓர் வளவு | முடிக்குரியது. ஆஜியார் என்பவரால் கூட்டிப்பிடிக்கப்பட்டது | 0 | 0 | 38·9 |
| 30 | ஷை .. | திறப்பான பாழ்நிலம் .. | எம். கே. எஸ். ஆஜியார் .. | 0 | 0 | 0·5 |
| 32 | ஷை .. | நெற்காணி .. | மட்டுக்களப்பு கதிராமன் நந்தியப்பன் | 0 | 0 | 1·1 |
| 33 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 1 | 1·5 |
| 34 | ஷை .. | தென்னைவளவு .. | ஷை .. | 0 | 0 | 24·9 |
| 35 | ஷை .. | திறப்பான நிலம் .. | முடிக்குரியது .. | 0 | 0 | 2·5 |
| 36 | ஷை .. | திறப்பான பாழ்நிலம் .. | டபிள்யூ. சாறிஸ் சில்வா மட்டுக்களப்பு | 0 | 0 | 15 |
| 37 | ஷை .. | தென்னந்தோட்டம் .. | சந்திவெளி—வேலாச்சி தெய்வானை | 0 | 1 | 24·6 |
| 38 | ஷை .. | வெளியான பாழ்நிலம் .. | ஷை .. | 0 | 1 | 3·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஹு ஆனி மாதம் 19 ந் தேதியிலன்று 10 மணிக்கு செங்கலடியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புக் கச்சேரி,
1922 ம் ஹு சித்திரைமீ 29 ந உ.

சீ. வி. பிறெயின்,
கீழ்மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சிறுவெளியம்மன் குளக்கட்டுக்கு நிலம் விடுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 5,686. குறிச்சி—சம்பூர்.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம் ஏ. | ரூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்கிண்டி குடா | .. நெல்வயல் | .. க. கோணமலை | .. 0 | 2 | 7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1922 ம் ஹு ஆனி மாசம் 29 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு மூதூர் கிராமக்கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலைக் கச்சேரி,
1922 ம் ஹு சித்திரைமீ 4 ந உ.

ஆர். எம். எம். வோர்ஸ்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

## உரிமைபெறும் யாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இல. 8,082, கண்டி.]

### 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண்நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணியிலே ஏதும் உடந்தை யுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள், 1922 ம் ௵ மெய் (வைகாசி)மீ 5 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே மத்திய மாகாண கண்டி டிஸ்திறிக்கில் கண்டி கச்சேரியில் உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவிற் தெரிபட்டாவது அல்லது எழுத்திலாவது சொல்லப்பட்ட காணிக்கு அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு சொல்லப்பட்ட சட்டத்தினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்பட இல்லாததாகிய குறித்த காணி முடிக்குரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

டீ. ஜீ. வில்லற்,
உதவி அரசாட்சி ஏசென்று.

குறிப்பு.—இங்கு சொல்லிய நிலத்திலே யல்லது நிலங்களில் வளிப்பாதை யுருத்து நிலங்களில் உடந்தையுள்ளதாக எண்ணப்படும்.

முன்சொல்லிய காணிகளின் விபரம்.

இங்கு இணைக்கப்பட்ட படத்தில்* விபரித்தபடி மத்திய மாகாண கண்டிப் பட்டணத்தின் உடப்பலாத்தை பிரிவில், கங்கதோல கோறளையில், மித்தலாவை யென்னும் கிராமத்தில் இருக்கும் பின்வரும் துண்டுகள் :—

பிரதமபடம் 7,129.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 1 .. | டெகிகொஸ்தென்னகேன அல்லது தென்னகேன .. .. .. | 0 2 11 |

இவற்றின் எல்லைகளாவன : வடக்கே-புகுல்கேன சிறிமாலி உருத்துப்பேசும் கடுகலகேனவும், புல்கேன டிக்கிறி வேடவும் ; கிழக்கே-புகுல்கெனகெதற சோமாலியா உருத்துப்பேசும் கெற்றியகொற்றுவவும் ; தெற்கும் மேற்கும்-மிற்றிலாவ, லமின்டுவாவும் மற்றவர்களும் உருத்துப்பேசும் டெகிகொஸ்தென்னகேன அல்லது தென்னகேனவும்.

*இங்கிலீசின் மூன்றாம் பாகம் 490 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

கிழக்குப்பளத்திலுள்ள பாலந்தீவு தரவையில் இரண்டு காவல்காறர்களின் கொட்டுகள் கட்டும் வேலை ஒப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. கேள்விக்காரன் தனது கேள்வியை யோர் முத்திரித்த உறைகளிலிட்டு அதனிடது மூலையில் "கிழக்குப்பளத்திலுள்ள பாலந்தீவு தரவையில் இரண்டு காவல்காறர்களின் கொட்டுகள் கட்ட" ஒப்பந்தக்கேள்வி யென்றெழுதி புத்தளம் உதவி யேசண்டவர்களுக்கு 1922 ம் ஆண்டு வைகாசி மாதம் 16 ந் திகதி பிற்பகல் 1 மணிக்குமுன் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப்பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டிணைக்கவேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங்காலத்தில் அதன்பின் ஞாயமான காலத்துள் தான் வேலையைக்கிரமமாக முடித்துப்போடுவதாக உதவி யேசண்டருட னேருடன்படிக்கை பண்ணிக்கொள்ள வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்திலோர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின் நாலு கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

இந்த இரண்டு காவக்காறர்களின் வீடுகளை பாலந்தீவு தரவையில் 24×12×12 அடி விசாலத்தில் கட்டவேண்டும்.

குடிசைகளின் கூரைகளையும், சுவர்களையும் புது மரங்களால்கட்டி, புது ஓலைகளால் மேய்ந்து கூரைகளுக்குமேல் பூட்டுகளை கட்டி கனம் யேத்தவேண்டும்.

இரண்டு கதவும் நிலைகளும் நெம்ப காலங்களுக்கு பாவிக்கக்கூடிய மரங்களால் செய்து பூட்டுகளும் தைத்து பெலப்படுத்தவேண்டும்.

தறைமட்டத்திலிருந்து வீட்டு தறைகளை களியால் ஒரு அடிக்கு உசத்தி மட்டப்படுத்தி, சாணிபோட்டு மொழுகவேண்டும்.

இந்த குடிசைகளுக்கு புது ஓலைகளாலும், மரங்களாலும் சுற்றுவேலிகள் அடைக்கவேண்டும்.

எஸ். எம். பீ. வேந்தர்கோன்,
உதவி யேசண்டருக்காக.

புத்தளங் கச்சேரி,
1922 ம் ௵ சித்திரைமீ 28 ந் உ.

---

H. R. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.